# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

பிப்ரவரி 2009 ஜீவியம் 14 மலர் 10

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| வருமான வளர்ச்சிக்கான வழிமுறைகள் | 3 |
| இச்சையற்றவருக்கு சித்திக்கும் | 4 |
| அன்பர் கடிதம் | 7 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 11 |
| சாவித்ரி | 12 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 14 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 23 |
| லைப் டிவைன் | 26 |
| அஜெண்டா | 40 |
| மனிதனுடைய சாதனை | 42 |
| படகு | 47 |
| லைப் டிவைன் - கருத்து | 60 |
| அன்பான அமிர்த அபரிமிதம் | 62 |
| பிரச்சினைகளை மறக்கும் பொழுது அவை மறைகின்றன | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

இறைவனின் செயலை இயற்கையில் காண்பதே நன்றி எனப்படுவது.

ஒன்றும் இல்லாத பொழுது எல்லாம் இருப்பதாகத் தோன்றும் நிறைவு பிரம்மம்.

நாம் காணும் பொருட்களை எல்லாம் அன்னை ஜீவன்-களாகக் காண்கிறார்.

அசரீரி அந்தராத்மாவின் மௌனம்.

## இம்மாதச் செய்தி

**ஆன்மீக சித்தியை**

**அன்றாட வாழ்வில் காண்பது**

**ஸ்ரீ அரவிந்தம்.**



# வருமான வளர்ச்சிக்கான வழிமுறைகள்

கர்மயோகி

1) வருமானம் பெருக,

- ✡ உழைப்பில் ஆர்வம் வெளிப்பட வேண்டும்.
- ✡ அறிவு உழைப்பில் வெளிப்பட்டால், வருமானம் அபரிமிதமாகப் பெருகும்.
- ✡ *ஆன்மாவை உழைப்பு வெளிப்படுத்தினால் வருமானம் அனந்தமாகப் பெருகும்.*

2) ✡ சுயநலம் பரநலமாக வேண்டும்.

- ✡ வறண்ட மனம் வளமாக வேண்டும்.

3) ✡ பிரார்த்தனை சமர்ப்பணமாக மாற வேண்டும்.

- ✡ அன்னையை அன்னைக்காக ஏற்க வேண்டும்.

4) ✡ வாழ்வு பண்பின் விளைநிலமாக வேண்டும்.

- ✡ பொய் கலவாத வாழ்வு வாழ வேண்டும்.
- ✡ தொழிலாளி முதலாளியாக வேண்டும்.
- ✡ பிறர் பெருமையை மனம் அறிந்து போற்ற வேண்டும்.

5) *வருமானம் அளவின்றிப் பெருக,*

- ✡ *இதுவரைப் பெற்றதற்கு உடல் பூரித்து நன்றி மலர வேண்டும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்மால் ''அம்பாள் வெற்றிலைப் பாக்கு எச்சிலை'' ஆர்வத்தோடும் நன்றியோடும் ஏற்க முடியுமா?

***வெற்றிலைப் பாக்கெச்சில் அமிர்தம்.***

# இச்சையற்றவருக்கு சித்திக்கும்

**N.** அசோகன்

ஓர் அரசு அதிகாரி ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 21ஆம் தேதி அவர் வழிபடும் தெய்வத்திற்கு முக்கியமான பண்டிகை நாளை கொண்டாடுவதற்காகப் புதுவை வந்துகொண்டிருந்தார். இவர் ஏற்றுக் கொண்ட தெய்வத்திற்கான வழிபாட்டு முறைகளில் பக்தனுடைய பிறந்த நாளன்று தெய்வத்தின் அருள் சிறப்பாகக் கிட்டுமென்ற நம்பிக்கை நிலவியது. அதாவது பிறந்த நாளன்று பக்தனுடைய ஆன்மா ஒரு படி மேலே உயர்ந்து செல்வதாகக் கருதப்பட்டது. 30 ஆண்டுகளுக்குமுன்னர் பஸ் சர்வீஸ் இன்று போல் சிறப்பாக அமையவில்லை. பக்தர் பிப்ரவரி 21ஆம் தேதியில் புதுவையில் இருக்க வேண்டுமென்றால், குறைந்தது மூன்று நாள்கள் விடுப்பு எடுக்க வேண்டியிருந்தது. ஓர் அரசாங்க அதிகாரிக்கு இத்தனை நாள்கள் விடுப்புக் கிடைப்பது அப்போது அவ்வளவு சுலபம் இல்லை. மேலும் அவருடைய மேலிட அதிகாரி ஒருவர் அதே அலுவலகத்தில் முகாமிட்டிருந்தார்.

பக்தருடைய பிறந்தநாள் பிப்ரவரி 19ஆம் தேதி வந்தது. தம்முடைய பிறந்த நாளன்று அவர் புதுவையில் இருக்கவேண்டும் என்றால் தொடர்ந்து ஐந்து நாள்கள் விடுப்புக் கிடைத்தாகவேண்டும். இது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாக அப்போது இருந்தது. இவருடைய சூழ்நிலை மற்றும் இவர் பயணம் செய்ய வேண்டிய தூரம் ஆகியவற்றைப் பற்றித் தெரியாத மற்றொரு பக்தர் இவருடைய பிறந்தநாளன்று புதுவை செல்வது பற்றிப் பேச்செடுத்தார். நண்பருடைய யோசனையை உடனே நிராகரித்தார் பக்தர். அந்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் அவருக்கு சூழ்நிலை திடீரென்று விபரீதமாக மாறியது. திடீரென்று பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருடைய அலுவலகத்தில் இத்தகையதொரு நிகழ்ச்சி நடந்ததே இல்லை. ஆனால் 110 நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவருடைய பதவியில் அமர்த்தப்பட்டார். மீண்டும் வேலை கிடைத்துவிட்டபிறகு



அடுத்த ஆண்டாவது தம் பிறந்தநாளன்று புதுவை செல்வதுபற்றி யோசித்தார். தமது சிந்திக்கும் திறனின் இறுதிக்கு வந்துவிட்டிருந்தார். புதுவையில் இப்படிப் பிறந்த நாளைக்கு வருவது பற்றி முன்பு பேச்செடுத்திருந்த நண்பரைச் சந்தித்தார். நண்பரும், “பிப்ரவரி 19 மற்றும் 21ஆம் தேதிகளில் நீங்கள் புதுவையிலிருப்பது எவ்வளவு சிரமமென்று எனக்குத் தெரியும். ஆனால் இது நம்மறிவிற்குத்தான் முடியாத காரியமேயொழிய நம் ஆன்மாவிற்கன்று. மனித முயற்சி முடியுமிடத்தில்தான் இறைமுயற்சி தொடங்குமென்ற உண்மை உங்களுக்குத் தெரியாதா?” என்று கேட்டார். அதிகாரியான பக்தரும் இவ்வுண்மையை நம்புவதாகப் பதில் சொன்னார். இவ்விஷயமாகத் தம் அறிவு எழுப்பும் கேள்விகளையெல்லாம் விலக்கினார். அவருடைய மனத்தில் அமைதி நிலவியது. அடுத்த ஆண்டு பிப்ரவரியில் தேர்தல் வந்தது. 110 உயர் அதிகாரிகளும் தேர்தல் பணிக்காக அழைக்கப்பட்டனர். விடுமுறைகள் அறிவிக்கப்பட்டன. அதிசயமாக இவரைத் தேர்தல் பணிக்கு அழைக்கவில்லை. பக்தரும் தம்முடைய பிறந்த நாளைக்குப் புதுவைக்கு வந்து, பிப்ரவரி 21ஆம் தேதி வரையிலும் தங்கினார். அந்த ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் பிப்ரவரி 19ஆம் தேதி வந்து, 21ஆம் தேதி வரையிலும் தங்கினார்.

தெய்வம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மட்டும் இது உண்மை என்றில்லை. அன்றாட வாழ்க்கையிலும் இது நடக்கத்தான் செய்கிறது. நாம்தான் இதைக் கண்டுகொள்வதில்லை. நாமொரு நேர்முகத் தேர்விற்குப் போகிறோம். முடிவுகள் அறிவிக்கப்படும்பொழுது நம் பெயரில்லை. அதனால் நாம் நம்பிக்கை இழக்கிறோம். நாம் வீட்டிற்கு வரும்பொழுது செலக்ஷன் ஆர்டர் நமக்காகக் காத்திருக்கிறது. நம் முயற்சியைக் கைவிட்டபின் இறைவன் நம்மைத் தேர்ந்தெடுக்கிறார் என்பது நமக்குப் புரிய விசேஷ ஆன்மீக அறிவு வேண்டும். தானே எல்லா வேலைகளையும் செய்வதாக நினைக்கும் மனிதனுக்கு இறைவன்தான் இவ்வேலைகளையெல்லாம் செய்கிறான் என்றும், அவர் செய்யும் வேலையைக் கெடுப்பதுதான் தன்னுடைய பங்கென்றும் தெரிய வாய்ப்பில்லை. “உன் பங்கு உபத்திரம் தருவதே” என்பதை

மனிதன் அறிவது ஞானம்.

முக்கியமாகப் பேரம் பேசும்பொழுது மேற்கண்ட உண்மைகள் தெரியவரும். ஒரு பெரிய சொத்தை வாங்க முயன்ற ஒருவர் கிரயப் பத்திரம் பதிவுசெய்யும் நேரத்தில் பாதி விலையை மட்டும் கொடுத்து வாங்க விரும்பினார். இது சாத்தியமில்லைஎன்று அவரது அறிவு சொன்னாலும், தம் ஆசையை வெளியிட்டுப் பார்த்தார். பலனில்லை என்று தெரிந்து வெறுங்கையுடன் வீடு திரும்பினார். பதிவு செய்வதற்குச் சிலமணி நேரத்திற்குமுன்னர் விற்பவரின் ஆளொருவர் இவர் வீட்டிற்கு வந்து இவருடைய விருப்பத்திற்கு, விற்பவர் உடன்படுவதாகத் தெரிவித்தார்.

இறைவன் அனுதினமும் அனைத்துச் செயலிலும் நம்மிடையே செயல்படுவதை நாமறிவதில்லை. நம் மனத்தின் இச்சை இறைவனின் இயல்பான செயலுக்குத் தடை. ''இச்சையற்றவருக்குச் சித்திக்கும்'' என்ற வழக்கு நடைமுறையில் செயல்படுவதை நாம் காணலாம்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அகந்தையைப் பிரகிருதி உற்பத்தி செய்தது. சைத்திய புருஷன் ஆன்மாவினுடையது. அகந்தையைக் கரைத்து சைத்தியபுருஷனை நாடுதல் எனில், நம் செயல் மையம் இயற்கையிலிருந்து ஆன்மாவிற்குப் போகிறதுஎனலாம். இதன் முதல் அறிகுறியாக எல்லா இயற்கையின் செயல்களும் - எண்ணம், உணர்வு - நம்மால் ஆரம்பிக்கப்படுவது நின்று, ஆன்மா ஆரம்பிப்பதற்காக நாம் காத்திருப்பதாகும்.

***நம்செயல் அழிந்தால்,***

***இறைவன்செயல் சைத்தியபுருஷன் மூலம் வரும்.***



# அன்பர் கடிதம்

ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம:

ஸ்ரீ அன்னையே துணை!

ஸ்ரீ அன்னையின் பாத கமலங்களில் பணிந்து இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கிறேன். நாங்கள் கடந்த 15, 16 ஆண்டுகளாக அன்னை பக்தர்களாக, ஸ்ரீ அன்னையை நினைத்து எந்த ஒரு காரியத்தையும் தொடங்குவோம். ஸ்ரீ அன்னை எங்கள் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் எங்களுக்கு உற்ற துணையாக இருந்து காப்பாற்றி வருகிறார். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அதை அன்னையிடம் பிரார்த்திப்போம். பிரச்சினை இருந்த சுவடே இல்லாமல் போய்விடும். நாங்கள் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள். நான், என் கணவர், எங்களுக்கு ஒரே மகள். ஸ்ரீ அன்னையின் துணையுடன் படிப்படியாக முன்னேறிக்கொண்டு வருகிறோம். எங்கள் மகளுக்குத் திருமணம் செய்யஎண்ணி அன்னையிடம் சமர்ப்பணம் செய்தோம். ஸ்ரீ அன்னையின் கருணை எங்களுக்கு வெகு சீக்கிரமே கிடைத்தது. ஸ்ரீ அன்னை அவதாரம் எடுத்திருக்கும் புதுவையிலேயே வரன் அமைந்தது. படிப்படியாகக் கல்யாண வேலைகள் தொடங்கி நல்லபடியாக ஏப்ரல் 30ஆம் தேதி எங்கள் ஒரே மகள் திருமணம் ஸ்ரீ அன்னையின் ஆசீர்வாதத்துடன் இனிதே நடந்தேறியது. திருமணம் முடிந்து நானும் என் கணவரும் எங்கள் மகளைப் பிள்ளை வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு, அன்று இரவு அங்கே தங்கியிருந்துவிட்டு, அடுத்த நாள் காலை மே 1ஆம் தேதி மனநிறைவுடன் எங்கள் வீட்டிற்கு ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்தோம். பிள்ளை வீட்டில் எங்களுக்குத் தாம்பூலத்துடன் புடவை, வேஷ்டி வைத்துக் கொடுத்திருந்தனர். அந்தப் பையுடன், என்னுடைய ஹேண்ட்பேக் இவைகளுடன் ஆட்டோவில் வந்து கொண்டிருந்தோம்.

நாங்கள் வந்த ஆட்டோ டிரைவர், தாம் 15 வருடங்களாக ஆட்டோ ஓட்டிக்கொண்டிருப்பதாக பேசிக்கொண்டே வந்தார். நாங்கள்

இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. வீட்டிற்குமுன்னால் இறங்காமல் சற்று முன்பே இறங்கிவிட்டோம். மனசு நிறைய சந்தோஷத்துடன் நாங்கள் இருவரும் வீட்டிற்குள் நுழைந்தோம். நாங்கள் எங்குச் சென்று வந்தாலும், புதிதாக எது வாங்கிக் கொண்டு வந்தாலும், முதலில் அன்னைக்கு சமர்ப்பித்துவிட்டுதான் மற்ற வேலைகளைப் பார்ப்போம். அன்றும் வீட்டிற்குள் நுழைந்து அன்னையின் அறையில் நாங்கள் கொண்டு வந்த பை மற்றும் ஹேண்ட்பேக்கை வைப்பதற்காக அன்னையின் படத்தின் முன் நின்றேன். கையில் பை மட்டும்தான் இருக்கிறது. ஹேண்ட் பேக்கை காணவில்லை. ஹேண்ட் பேக்கில் ஒரு ரூபி நெக்லஸ், கொஞ்சம் பணம், வெள்ளி குங்குமச்சிமிழ் இருந்தது ஞாபகம் வந்தது. நான் தடுமாறுவது என் கணவருக்குத் தெரிந்தது. வீட்டில் உறவினர்கள். என்ன செய்வதுஎன்று தெரியவில்லை. நானும் என்கணவரும் கொஞ்சம் தூரம் பஸ் ஸ்டாண்டு வரைப் போய் பார்த்தோம். ஆட்டோ டிரைவர் முகம் நன்றாக நினைவிருக்கிறது. வந்திருந்த உறவினர்களோ, ‘‘எந்த ஆட்டோக்காரன் திருப்பிக் கொண்டுவந்து கொடுப்பான். ஒன்றும் சாத்தியமில்லை. போனது போனதுதான்’’ என்றார்கள். கொஞ்சம் நேரம் ரோட்டில் போய் வரும் ஆட்டோக்களை பார்த்துவிட்டு, மறுபடியும் வீடு திரும்பினோம். எதுவுமே நினைக்கத் தோன்றவில்லை. வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள். எனக்கு எந்த வேலையும் ஓடவில்லை. சற்று நேரம் கழித்து குளித்துவிட்டு வந்து அன்னையின் படத்தின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து அன்னையிடம் மனமுருக பிரார்த்தித்தேன். இப்படியும் நடக்குமா, இந்த காலத்தில்! இது சாத்தியமா! என்ற கேள்விக்குறி எல்லோர் மனதிலும் இருந்தது. ஆனால் ஸ்ரீ அன்னை ஒரு சில நிமிடங்களிலேயே நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அந்த அற்புதத்தை நிகழ்த்திக்காட்டினார், ஆட்டோக்காரர் ரூபத்தில். ஆட்டோக்காரருக்கு எங்கள் வீடு தெரியாது. ஏனென்றால் நாங்கள் வீட்டின் அருகில் இறங்காமல் கொஞ்சம் முன்பே இறங்கிக்கொண்டு விட்டதால் ஆட்டோக்காரருக்கு எங்கள் வீட்டை பற்றித் தெரிய வாய்ப்பில்லை. அதனால் அவர் இரண்டு, மூன்று முறை எங்கள்



ரோட்டில் அங்கும் இங்கும் போய் வந்துகொண்டிருந்தார். எதேச்சையாக வாசல் பக்கம் வந்த என்தங்கை கொஞ்சம் சந்தேகத்துடன் ‘‘ஆட்டோ, ஆட்டோ’’ என்று கூப்பிடவும், என் கணவர் அதைக் கேட்டுக் கீழே இறங்கிப் போய் பார்த்ததில் அந்த ஆட்டோக்காரர் இவரைப் பார்த்த உடனே வண்டியை நிறுத்திவிட்டு, இருவரும் பரஸ்பரம் தெரிந்து கொண்டனர். ஆட்டோக்காரர் எங்களை விட்டுவிட்டு, ரொம்ப தூரம் சென்று, ஓர் இடத்தில் வண்டியை ஓர் 5 நிமிடம் வரை நிறுத்திவிட்டு, டிபன் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிவந்து ஆட்டோவில் ஏறியபோது பின்பக்கம் அந்த ஹேண்ட் பேக்கைப் பார்த்து இருக்கிறார். நடுவில் எந்த சவாரியும் ஏறவில்லை. அதுவரை ஹேண்ட்பேக் பத்திரமாக இருந்திருக்கிறது. இதை எப்படியாவது உரியவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்என்ற உயரிய எண்ணத்துடன், அவ்வளவு தூரத்திலிருந்து மறுபடியும் எங்கள் வீடு இருக்கும் இடத்திற்கு தேடிக்கொண்டு வந்திருக்கிறார். இந்தக் காலத்தில் இவ்வளவு சிரத்தையுடன் இன்னொருவர் பொருள்மேல் ஆசையில்லாத ஓர் உயரிய மனிதரை எங்கள் வாழ்நாளில் நாங்கள் பார்த்ததில்லை. ஸ்ரீ அன்னையே ஆட்டோக்காரர் ரூபத்தில் இந்த அற்புதத்தை நிகழ்த்தி இருக்கிறார். அவரை உடனே வீட்டிற்கு அழைத்து வந்து உபசரித்து, அவர் காலில் விழுந்து வணங்கினோம். அவரும், ‘‘ஹேண்ட்பேக்கில் எல்லாம் சரியாக இருக்கிறதா?’’ என்று கேட்டார். நாங்கள் ஹேண்ட்பேக்கைப் பார்த்தவுடன், அதைத் திறந்து பார்க்கவேண்டும் என்றுகூட எங்களுக்குத் தோன்றவில்லை. ஆனால் அவர் சொன்னவுடன் பார்த்தபோது, எல்லாப் பொருட்களும் சரியாக இருந்தன. உடனே ஸ்ரீ அன்னைக்கு நன்றி தெரிவித்து, காணிக்கை செலுத்தி, சமர்ப்பணம் செய்தோம். அந்த ஆட்டோக்காரருக்கு எங்களால் முடிந்த சன்மானத்துடன் அவருக்கு நன்றி தெரிவித்து, தாம்பூலம், பலகாரத்துடன் அவரை வழி அனுப்பி வைத்தோம். வீட்டில் இருந்த உறவினர்களும் பார்த்து ஸ்ரீ அன்னையின்மகிமையை நினைத்து மெய்சிலிர்த்தார்கள். எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு இது. இந்த நிகழ்ச்சியிலிருந்து ஸ்ரீ அன்னையின்மேல் இருந்த நம்பிக்கை அதிகமானதுடன், நாமும் பொறுப்புடனும் கவனத்துடனும்

இருக்க வேண்டும்என்ற நல்ல பாடம் எங்களுக்குக் கிடைத்தது. இனி எங்குச் சென்றாலும், இறங்கும்போது எல்லாப் பொருளையும் எடுத்துக் கொண்டோமாஎன்ற நினைவு வரும். அந்த அளவிற்கு எங்களுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு படிப்பினையாகவும், அன்னையின் மேல் இருந்த நம்பிக்கை இன்னும் பன்மடங்கு உயர்ந்தது.

எங்கள் வாழ்வில் ஸ்ரீ அன்னை நிகழ்த்திய இந்த அற்புதத்தை ஸ்ரீ அன்னை அன்பர்களிடம் பகிர்ந்துகொண்டு ஸ்ரீ அன்னையின் பாதகமலங்களில் பணிந்து, கோடானுகோடி நன்றியையும் வணக்கத்தையும் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

*- அன்னையின் பாதம் பணிந்து கல்யாணி விஜயராகவன், பெங்களூர்.*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவனோடு வாழும்பொழுது அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் நிலை அதிக நெருக்கத்தை அளிக்கிறது.

***தன்னை அர்ப்பணம் செய்வதே பெறும் திறனை நிர்ணயிக்கும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு முறை கண்டதில், உடலில் ஏற்பட்ட உணர்வை அறிவது மூட நம்பிக்கை. நடைமுறையில் ஒரு முறை கண்ட நிகழ்ச்சியைப் பொதுவான சட்டமாக மனம் ஏற்பது மூட நம்பிக்கை.

***குறிப்பானதைப் பொதுவாக அறிவதும் மூட நம்பிக்கை.***



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**71.** அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.

✡ **ஆணவத்தை ஆராய்ந்தால் அத்தனையும் அழிவுக்குரியவை.**

**72.** ஆயிரம் காக்கைக்கோர் கல்.

✡ **ஆயிரம் பிரச்சினைக்கு ஒரு சமர்ப்பணம்.**

**73.** குரங்கின்கை கொள்ளி கொடுத்துவிடல்.

✡ **அகந்தைக்கு அருளைப் பெற்றுத் தருதல்.**

**74.** நாய் வால் திருந்துதல் என்றுமே இல்.

✡ **கர்மத்தை அழிக்கும் சமர்ப்பணம் நாய் வாலையும் நிமிர்த்தும்.**

நாய் வாலை நிமிர்த்த முடியாதுஎன்பது வழக்கிலுள்ள பழமொழி.

(நாய் வால் போல் நிமிராத பிரச்சினைகள் ஆழ்ந்த பிரார்த்தனையால் தீர்வது அன்பர் அனுபவம். நாய் வால்மீது மனத்தை தியானத்தில் நிறுத்தி (concentrate) லயித்தால், லயம் நீடிக்கும்வரை வால் நிமிர்வதைக் காணலாம். இந்த சக்தியையறிய இது போன்ற சோதனைகளை ஒரு முறை செய்யலாம். இரண்டாம் முறை செய்ய அனுமதியில்லை).

**75.** தாய் மிதித்து ஆகா முடம்.

கோழி மிதித்து குஞ்சு சாகாதுஎன்பது வழக்கிலுள்ள பழமொழி.

✡ **அன்பர் செய்யும் தவறு அவரையும் பாதிக்காது, எவரையும் பாதிக்காது.**

தொடரும்....

❀ ❀ ❀

## P.96 The Thousandfold expression of the One
## ஆயிரம் முகம் கொண்ட ஆண்டவன் அவன்

✡ உலகனைத்தும் சேர்ந்து ஒரே பார்வையில் தெரிந்தது.
✡ பரந்த ஞானதிருஷ்டிக்குத் தப்பிப்பது என்பதில்லை.
✡ அவனை நாடி வாராததில்லை, வந்ததில் உறவில்லாததில்லை.
✡ பிரம்மாண்டம் அவனோடு உயிரில் உறவு கொண்டாடிற்று.
✡ தெய்வம் ஜீவியமாகி, உருவங்களாக அவன்முன் எழுந்தது.
✡ பிறப்பற்றவன், அழிவற்றவன் உடலை ஏற்றான்.
✡ பிரம்மம் பிரபஞ்சத்தில் தன்னை திருஷ்டியாக அமைத்தது.
✡ அனாதியான புருஷஸ்பர்சம் ஜீவனளித்தது.
✡ ஆத்மாவின் சிந்தனைகள் எண்ணத்தால் கட்டுப்பட்டு அவன்முன் நின்றன.
✡ சொல்லைக் கடந்த சலனத்தின் சொரூபம்.
✡ உலகத்தின் எல்லை, ஜீவனின் அம்சமான ரூபம்,
✡ எழிலுருவமான இறைவனின் திருமுகம் தெரியும் வாயில்.
✡ அனுதினமும் ஏற்கும் அற்புதக் காட்சி,
✡ ஆத்ம சத்தியம் அடையாளமாக எழுந்தது.
✡ உடலற்றவனின் உயிருள்ள உடல்கள்,
✡ அவனை நாடி ஆதரவுதர முன்வந்தன.
✡ உறங்காத மனம் எழுப்பிய தீராத பார்வை,
✡ புலப்படாதது, எழுத்தாக மாறிய தொடர்பு.
✡ எண்ணிறந்த அடையாளம் எடுத்துக்காட்டும் சூழல்,



✡ வாழ்வின் ஆயிரம்அரங்கம் எழுப்பிய குரல்கள்,
✡ அவளது வலுவான அழைப்பைச் சேவையாகக் கொணர்ந்தது.
✡ புவி வாழ்வின் சொர்க்க நுணுக்கம் எடுத்த படையெடுப்பு,
✡ இருண்ட கற்பனை கண்ட நரகத்தின் கனவு,
✡ கனவு நனவாகும் பூவுலக அனுபவம்.
✡ மந்தமான திறமை உணர மறுக்கும் செய்தி,
✡ அழியும் உடல் தாங்க முடியாத அனுபவம்,
✡ புனித செயலின் புலப்படும் அமைப்பு.
✡ சுயமான ஜனனம் வாழும் சூழல்,
✡ சொந்தமான சக்தியின் மூடியற்ற முகம்.
✡ ஆத்மவலு தரும் அழுத்தமான வரவு.
✡ ஜீவியம்என்ற புலனில் ஆழ்ந்து அகன்ற பள்ளம்.
✡ வேகத்தின் தீவிரம் தூய்மையாகப் பரவியது,
✡ ஒரு குரல் எழுப்பிய மூலத்தின் பிரம்மம்.
✡ வன்மையான காவியம் சுதந்திரமான இனிமை பெற்றது,
✡ ஆனந்தம் பயங்கரமாகிப் பெற்ற அழகு.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சிந்தனைக்கு உரிமையில்லாத நேரம், மனம் ஒய்தல் ஒழிதலில்லாமல் எதிர்பார்க்கிறது. வெளிவர முயலும் எண்ணம் உணர்வால் உந்தப்படும்பொழுது மனம் எதிர்பார்க்கும்.

*உலகம் தாராத உரிமையை மனம் எதிர்பார்க்கும்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**941) கொடுங்கோலனை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வந்தது கிருஷ்ணாவதாரம். அதனால் இன்றும் பகவத் கீதையைப் படிப்பவர்கள் கிருஷ்ணன் ஜெயிலில் பிறந்து, வெளியேறி, பட்ட கஷ்டங்களுக்கொப்பானவற்றை அனுபவிக்க நேரிடுகிறது. தங்கள் ஜீவியத்தில் அதைக் கடந்தவர்கள் கீதையைப் படிக்கும் பொழுது அக்கஷ்டங்களை அனுபவிக்கத் தேவையில்லை.**

***கீதைக்கு வியாக்கியானம் எழுதியவர் அனைவரும் சிறை சென்றவர்களே.***

விவேகானந்தர் பகவான் கையில் கீதையைக் கொடுத்தது அலிப்பூர் ஜெயிலில்தான். அதுவே குறிப்பிடத்தக்கது. மகாபாரதம் சண்டை நிறைந்த கதை. அதை ஒருவர் வீட்டில் படித்தால், வீட்டில் சண்டை வரும்என்பதால் பெரியவர்கள் சிறுவர்களை இராமாயணம் படிப்பதை ஏற்பார்கள்; பாரதம் படிப்பதை அனுமதிக்கமாட்டார்கள். இது ஒரு பெரிய சூட்சும உண்மை. காலரா, பெரியம்மை தொற்று வியாதியெனப் பொதுவாகத் தெரியுமானாலும், எப்படிப் பரவுகிறது என்பதை அறிய நாளாயிற்று.

✡ இன்றும் எல்லா வியாதிகளும் சூட்சுமமாகத் தொற்றும் வியாதியென உலகம் அறியாது.

✡ மேலும் வியாதி மட்டும் தொற்றுவதில்லை; குணம், செயலும் தொற்றி வரும்.

✡ அதிர்ஷ்டம் தொற்றி வரும்.

✡ தரித்திரம் தொற்றி வரும்.

✡ உலகில் தொற்று நோயெனப் பரவாதது இல்லைஎன்பதை இன்று எந்த நாட்டிலும் எடுத்துக் கூற முடியாது.

✡ ஆன்மீகரீதியில் அதுவே உண்மை.



நீங்கள் கதை ஏராளமாகப் படிப்பவரானால், உங்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைச் சிந்தித்துப் பார்த்தால், அவற்றிற்கும் நீங்கள் விரும்பிப் படித்த கதைகட்கும்உள்ள தொடர்பு தெரியும். ஒருவர் செய்வது பரவினால், அவரை மற்றவர்கள் பார்த்து அதேபோல் செய்கிறார்கள்எனக் கொள்கிறோம். அது உண்மை. அந்த உண்மையில் அதன் தொற்றிவரும் அம்சம் மறைந்துவிடுகிறது. புதுப் பணக்காரர் 28 கார்கள் வாங்கினார். 3 பேர் கூட்டாளிகள். ஒருவருக்கு பென்ஸ் வாங்க ஆசை. சொல்லத் தைரியமில்லை. வாங்கிவிட்டார். கூட்டாளிகட்குச் சமாதானம் சொல்ல வேண்டும். இவர்கட்கு மந்திரிகள் பழக்கம் உண்டு. மந்திரிகள் பயன்படுத்த வாங்கினேன்என சமாதானம் கூறினார். எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. எளிய நிலையிலிருந்து உயர்ந்துவரும் வேளையில் இப்படிச் செய்வது சரியில்லையென மற்ற பார்ட்னர்கள் மனம் நொந்தனர். வாங்கிய புதியகார் ஒரு விபத்திற்குள்ளாயிற்று. கொஞ்ச நாளில் 28 கார்களும் விபத்தில் சிக்கின.

❀ விபத்தும் தொற்றி வரும்என நாம் அறிவதில்லை.

சிதம்பரத்தில் உள்ளவர் செனட் மெம்பரானால், அவர் நண்பர்கள், உறவினர்கள் மதுரையிலும், டெல்லியிலும், கலிபோர்னியாவிலும் இருப்பவர் கல்லூரி நிர்வாகத்தில் உறுப்பினராவதும் அந்த நேரம் வியப்பாக இருக்கும். *வாழ்க்கை உலகெங்கும் ஒன்றே. ஓர் இடத்தில் நடப்பது மற்ற இடங்களிலும் எழுகின்றன.* புதுவையிலிருந்து கலிபோர்னியா சென்றார்கள். அங்கு தங்கியிருந்த வீட்டில் நிலம் நடுங்கியது. சான்பிரான்ஸிஸ்கோவில் பூகம்பம் வழக்கமானது. திரும்பி புதுவை வந்தனர். தென்னிந்தியாவில் நிலம் நடுங்குவதில்லை. நிலம் லேசாக நடுங்கியது.

❀ *பூகம்பத்தைப் போன இடத்தில் தொற்றிக் கொண்டு வந்தோம் என மனம் நினைப்பதில்லை.*

பல் டாக்டர், கல்லூரியில் முதல்வராகத் தேறியவர். உடன் பிறந்தவர் இன்ஜினீயர், கல்லூரி ஆசிரியர். பல் டாக்டர் தகப்பனார் ரைஸ் மில் வைத்திருந்தார். அதன் வருமானத்தைக் கருதி ரைஸ்

மில்லை அவர்கள் வீட்டில் காமதேனு என்பார்கள். பல் டாக்டர் ஒரு ரைஸ் மில் ஆரம்பித்தார். அது உடன் உள்ளவர்க்கு வினோதமாகத் தோன்றியது. ‘‘எங்கள் குடும்பத்தில் எவரும் எந்தத் தொழிலில் இருந்தாலும் அங்கு ஒரு ரைஸ் மில் இருக்கும்’’ என்றார்.

❀ ரைஸ் மில் தொழிலும் தொற்றி வரும்.

எது தொற்றி வரும்? தொற்றி வருவதற்கு (medium) வழி எது? எந்த அளவுக்குத் தொற்றி வரும்? அதைத் தடை செய்ய முடியுமா? என்றெல்லாம் ஆராய்ச்சியில்லை. 20 வருஷமாக இரு நண்பர்கள் வேறு வேறு ஊர்களில் வேறு வேறு துறைகளில் வேலை செய்கிறார்கள். முதல்வரை சஸ்பெண்ட் செய்தார்கள். 125 ஆண்டு ஸ்தாபனம். இதுவரை இப்படி நடந்ததில்லை. இப்பொழுது நடக்கிறது. அதுவும் அபாண்டமாக நடக்கிறது. ஒரு வாரத்தில் ஆர்டர் ரத்தாயிற்று. இரண்டு ஆண்டுகட்குப்பின் அடுத்தவருக்கு ousting order வேலை நீக்கம் வந்தது. அதற்கு சட்டமேயில்லை. சட்ட விரோதமான செயல். 3 மாதம் கழித்து ஆர்டர் ரத்தாயிற்று.

❀ வேலை நீக்கம் தொற்றி வரும்.

பெண் வேலைக்குப் போனாள். திருமணம் தள்ளிப் போகிறது. நெடுநாள் தள்ளிப் போயிற்று. அவள் மனத்தில் திருமணமில்லை. திருமணமானவரிருக்கிறார். அந்த எண்ணம் எண்ணமாகவே இருந்தது. அவளைப் பார்க்கப் பல வரன்கள் வந்தனர். அத்தனை பேரும் இரண்டாம் திருமணம் செய்து கொண்டனர். அவள் எண்ணம் பரவும் தன்மையுடையது. கல்லூரியில் படிக்கும் பொழுது மாமன் மகளை மணக்க விரும்பினான். குடும்பம் ஏற்கவில்லை. பெரிய இடத்துச் சம்பந்தம் வந்தது. நிச்சயதார்த்தத்திற்குப்பின் தகராறு. ஒருவாறு அடங்கியது. 3 ஆண்டுகள் கழித்து அப்பெண்ணிற்கு - மாமன் மகளுக்கு - நிச்சயமாயிற்று. தகராறு எழுந்தது. 6 மாதம் கழித்துத் தீர்ந்தது.

❀ தகராறும் தொற்றி வரும்.



பட்டம் பெற்று, பயிற்சி பெறாமல் ஒருவர் ஆசிரியர் வேலைக்கு வந்தார். பிரபலமானார். வக்கீல் பட்டம் பெற்றவர் கோர்ட்டில் வேலை செய்யாமல் பள்ளியில் வேலைக்கு வந்து அந்த ஆசிரியரிடம், ‘‘உங்களைப் போல் பிரபலமாக வேண்டும்என நானும் ஆசிரியர் ஆனேன்’’ என்றார். அவர் பயிற்சி முடித்து அடுத்த ஊரில் வேலைக்குப் போனார். அதிகம் சம்பாதித்தார். கோர்ட்டில் வக்கீல்களும் அவ்வளவு சம்பாதிக்கவில்லையெனப் பேசிக் கொண்டனர். அந்த ஊரில் வக்கீல் பட்டம் பெற்றவர் ஆசிரியராகி, பல ஆண்டுகள் அதிகம் சம்பாதித்து, மீண்டும் கோர்ட் வேலையை ஏற்றார்.

❀ வியாதி, குணம், செயல், அதிர்ஷ்டம், தரித்திரம் தொற்றும்.

**ஒன்று நடந்தால் அதைத் தொடர்ந்து பல நடக்கும் என்பது வழக்கு.**

❀❀❀

## 942) பொதுமக்களிடமிருந்து எவ்வளவு விலகியிருக்கிறோமோ அந்த அளவுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

***நெருக்கமில்லாவிட்டால் நல்ல பெயர் எடுக்கலாம்.***

✡ பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைப்பற்றி இரண்டு முக்கிய உண்மைகள் உண்டு.

❀ அடிப்படையில் அது உண்மையை வெளியில் கொணர்ந்துவிடும்.

❀ மக்கள் அபிப்பிராயத்திற்கும் உண்மைக்கும் தொடர்பிருக்காது, எதிராகவுமிருக்கும்.

✡ பொதுமக்களுடைய அபிப்பிராயம்என்பது ஓர் உணர்ச்சி, கருத்து இல்லை.

✡ பொதுமக்களுடைய அபிப்பிராயம் அவர்களையே அதிகமாகப் பிரதிபலிக்கும்.

விஷயத்தைவிட தங்கள் நிலையையே மக்கள் பாராட்டுவார்கள்.

✡ மக்கள் விபரம் அறிய முயலமாட்டார்கள்; மனத்திற்கு இதமானதை

ஏற்பார்கள்.

✡ *தூரத்திலுள்ளவரை பிரபலம் நிச்சயம். அருகே வந்தால் எதிராகப் போகும்.*

✡ விஷயம் தெரியாமல் பாராட்ட விழைவது எளியமனம். அது பொதுவானது.

✡ நெருக்கமானவரை நல்லவராகக் கருத மனம் இசையாது.

✡ தூரத்திலுள்ளவரைத் தவறாகக் கருத மனம் வாராது.

✡ உயரத்திலுள்ளவர் உயர்ந்தோர்என்பது நினைவு.

✡ அந்த நினைவு சிதையாமலிருக்க மனம் பெரும்பாடு படும்.

✡ நல்ல அபிப்பிராயமுள்ள உயர்ந்தவரைப் பற்றி உண்மையான தவறு வெளிவந்தால் மனம் விரைவாக மறுத்துவிடும்.

✡ தான் நேரில் பார்த்த பெரியவரைப் பெரியவராகவே நினைக்க மனம் துடிக்கும்.

✡ டி.வி.இல் பார்த்தாலும், போட்டோவில் பார்த்தாலும், ஒரு முறை பார்த்து நல்ல அபிப்பிராயம் எழுந்தபின் மாற்றிக்கொள்ள இசைவது மனமில்லை.

✡ நேரில் பார்த்த பெரியவர் பேசிய ஓரிரு சொற்கள் இதமாகக் காதில் ஒலித்திருந்தால், அந்த நல்ல அபிப்பிராயம் மாறாது.

✡ இலட்சியமான தலைவர்களின் இலட்சியம் அவர்கள் கண்களில் தெரியும். அது பட்டிருந்தால் நல்ல அபிப்பிராயம் எழும். அது மாறாது.

✡ இலட்சியத் தலைவரின் இலட்சியம் கதிர்களாக உலகில் நடமாடுவது நம்முள்ளே நுழைந்தால், மாறாது.

✡ ரேடியோ, டி.வி., பொதுக்கூட்டங்களில் கேட்ட குரல் பதிந்தது நல்ல அபிப்பிராயம் ஏற்படுத்தியிருந்தால், மாறாது.

✡ அபிப்பிராயம் விவரத்தால் ஏற்படுவதில்லை.

✡ மனம் ஏற்க முடிவு செய்வது, ஏற்பது அபிப்பிராயம்.

✡ எவருக்கும் நெஞ்சில் ஏக்கமிருக்கும். பூர்த்தியாகாத ஏக்கத்தை ஒரு தலைவர் பூர்த்தி செய்தால், அது கடைசிவரை நீடிக்கும்.



✡ முகபாவம் முதல் முறை கண்டபொழுது நெஞ்சைத் தொட்டால், நிலையாக இருக்கும்.

✡ குரலுக்குக் கவர்ச்சியுண்டு. கவர்ச்சி கடைசிவரை வரும்.

✡ பிரபலத்திற்கும், பிரபலமானவர் அறிவுக்கும் சம்பந்தமில்லை.

✡ பிரபலத்தை ஏற்பது பெருமிதம்.

✡ அதிக பிரபலமானவர் சிலரிடையே எந்தப் பெரிய நல்லதும் இருப்பது இல்லை.

✡ பிரபலம் பெருந்தோற்றம்.

✡ பிரபலம் பிறர் பலம்.

✡ கடந்த தலைமுறை பிரபலம், காரணமின்றி ஒருவரைப் பிரபலம் ஆக்குவதுண்டு.

✡ தாயார், தகப்பனாரைச் சிறு வயதிலிழந்தவர் ஏக்கம், பிரபலமாக முடியும்.

✡ வாழ்வில் முன்னுக்குவரும் ஆர்வம் ஒரு தலைவரை, அவர் பிரபலத்தை நாடும்.

✡ பிரம்மச்சர்யம் பிரபலம் தரும்.

✡ பிரம்மச்சாரிக்குப் பிறர் பிரபலத்தை ஏற்க அதிக விருப்பம் உண்டு.

✡ நிறைவானவர் தன் நிறைவுவளர அடுத்தவரைப் பிரபலமாகக் கருதுவார்.

✡ குறையுள்ளவர் தம் குறை நிறைவுபெற ஒருவர் பிரபலத்தை ஏற்பார்.

✡ பிரபலத்திற்கு அடிப்படை old is gold கடந்தனவெல்லாம் கடவுள் போன்றன என்ற கருத்து.

✡ பக்தி, விஸ்வாசம் பிரபலத்தை நாடும்.

✡ ஒருவர் பிரபலத்தை மனம் ஏற்கும்பொழுது மனம் விசாலமடைகிறது. விசாலமான மனத்தை அனைவரும் விரும்புவர்.

✡ நாட்டின்மீதுள்ள பற்று ஒருவரைப் பிரபலமாக ஏற்கிறது.

✡ 'காதில் நல்லசொல் விழ வேண்டும்' என்பது மனத்தில் பிரபலமாகிறது.

✡ நெடுநாளைய பிரபலம் உண்மையின் அடிப்படையில் ஏற்பட்டது.

❀ ❀ ❀

**943) உன் சேவையின் பலனின் தரம் மக்கள் மனநிலையை நிர்ணயிப்பதில்லை. உன் ஆன்மவலிமை, வதந்தியைக் கடந்துவந்த அளவுக்கு நல்ல பெயர் எழுகிறது.**

*வதந்தியைக் கடந்த வலிமைக்கு நல்ல பெயருண்டு.*

மனிதன் நம்மைத் தேடிவந்து, அவனுக்குக் கிடைக்காதது நம்மிடம் இருப்பதை அறிந்து, போற்றி, கிடைத்தாற் போதும்என நினைத்து, பணிந்து, பயந்து, கேட்கத் தயங்கி நிற்கும்பொழுது, அதைக் கொடுக்கும் நிலையில் உள்ளவர் நல்ல பெயர் எடுப்பார்.

✡ ஏசுவைச் சிலுவையில் அறைந்தனர். அவர் தெய்வீக அன்பை உலகுக்குக் கொண்டு வந்தார். தெய்வீகபலம் முதலில் வந்திருந்தால், அன்பு அதனால் பாதுகாக்கப்படும். ஏசு கொண்டுவந்த அன்பிற்குப் பாதுகாப்பு இல்லை.

அவர் வந்த காலத்தில் மனிதன் அன்பைத் தேடவில்லை. அவன் நாடாததை, அறியாததை அவர் ஏந்தி வந்தார். தன்னைப் பாதுகாக்கும் பலமும் அவரிடமில்லை. அவர் மக்களுக்குப் பலியானார்.

✡ பணக்காரர் பெரும்பாலோருக்கு நல்ல பெயருண்டு. எவராவது இவர்களை எதிர்த்தால், குறை சொன்னால், பணபலம் அவர்களைப் பாதிக்கும். பாதிக்கப்படும் நேரத்தில் மக்கள் பணத்தை ஏற்று, அதன் நடைமுறையைச் சரி என்பர். ஏனெனில் அவர்கட்குப் பண பாதுகாப்புத் தேவை. அதைக் கண்டு பயப்படுகிறார்கள். *பயம், பாதுகாப்பு வேண்டுமென்ற பயம், பணிவாக மாறி வாயால் நல்ல பெயராக வெளிவருகிறது.*

✡ பொய்யே சொல்லாதவரைக் காண்பதரிது. அப்படி ஒருவரிருந்தால் அவர் நல்ல பெயரெடுப்பார். அவர் வாழ்வில் பெரும்பலன் பெற்றால், உலகம் தான் ஏற்ற பொய்க்கு ஆபத்துஎன அறிந்து அவனை ஒழித்துக்கட்ட முயல்வர்.

✡ மட்டமானவர், அல்ப புத்தியுள்ளவர், ஒரு விஷயத்தில் இலட்சியவாதியானால், உலகம் அவருடைய அல்பம், மட்டத்துடன்



இணைந்து, அவர் இலட்சியம் தன் இலட்சியம் என அவரைப் போற்றும்.

✡ அஹிம்சைக்குப் பாடுபட்ட மகாத்மாவைச் சுட்டுக் கொன்றனர்.

உலகைக் காப்பாற்றிய சர்ச்சிலை எலக்ஷனில் தோற்கடித்தனர்.

உலகுக்கு சுதந்திரம் அளித்த நெப்போலியனை எல்பா தீவிற்கு அனுப்பினர்.

மக்களுக்கு அஹிம்சை தேவையில்லை. அந்த நேரம் வன்முறை ருசித்த நேரம்.

அதற்கு காந்திஜி பலியானார்.

சர்ச்சில் வெற்றியை உலகம் பாராட்டியது, அளவுகடந்து பாராட்டியது.

அவர் கட்சியைப் பாராட்டவில்லை. அவர் M.P. எலக்ஷனில் வென்றார்.

அவர் கட்சி தோற்றது.

உலகம் நெப்போலியனுக்குக் கிரீடம் வைத்தது.

அவன் அழித்த மன்னராட்சியின் பெருமையை அவன் தேடினான்.

அதனால் மன்னர்கட்சி வலுத்து, அவன் தோற்றான்.

உலகம் புத்தரைப் போற்றிப் பணிந்து பின்பற்றியது.

ரூஸ்வெல்டை 4 முறை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுத்தது.

✡ உதவியை வலியக் கொடுத்தால் மனிதன் மறுப்பான். அவனுக்குப் போய்ச் சேராது.

எந்த உதவிபெற அவன் தகுதியில்லையோ, அதைக் கொடுக்காவிட்டால் கேட்கமாட்டான்.

கல்வியின் அவசியத்தை 1950இல் அவன் அறியவில்லை.

பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன.

1980இல், 1999இல் கல்வியின் மரியாதை புரிகிறது. பெரும்பணம் கொடுத்து அதைத் தேடுகிறான்.

1940இல் இங்கிலீஷ் வைத்தியத்தை மக்கள் நாடவில்லை. டாக்டர் வீட்டிற்கு வந்தார்.

இப்பொழுது அதன் மகத்துவம் புரிகிறது. பீஸ் ரூ.100/-. அப்பல்லோவில் ரூ.600/-.

தமிழ்நாடெங்குமிருந்து அங்கு மக்கள் வருகின்றனர்.

இன்றும் இன்ஷூரன்ஸ் மதிப்பு மக்கள் அறியாதது.

200 ஆண்டுகட்குமுன் இங்கிலாந்தில் ஒரு பெண்ணை மணக்க முதலில் செய்வது நிச்சயதார்த்தமில்லை. வரன் தன் ஆயுளை இன்ஷூர் செய்ய வேண்டும்.

டாட்டா விமானக் கம்பனி ஆரம்பித்த பொழுது, விமானம் ஒரு பிரயாணியும் இல்லாமலிருந்த நாட்களுண்டு. போஸ்ட் ஆபீஸ் போய் தபால் மூட்டையைப் பெற்று இலவசமாக விமானத்தில் எடுத்துச் சென்றனர்.

✡ தூர இருந்தால் நல்ல பெயர்.

எதுவும் கொடுக்கப் பிரியப்படாவிட்டால் ரொம்ப நல்ல பெயர்.

எல்லாம் வைத்திருப்பவர் கொடுக்க நினைக்காவிட்டால் அவர் பணத்திற்காக நல்ல பெயர்.

கொடுக்கவில்லைஎன்பதால் அதிகப் பிரபலம்.

கொடுக்க விரும்பினால் பெறுபவர், "ஏன் தருகிறார்?" என்று கேட்பார்.

அவர் சந்தேகப்படுவார்.

தவறாக நினைப்பார்.

இது மனித சுபாவம்.

எதற்காக மனிதன் அலைகிறானோ அதை அவன் எவரிடம் வந்து கெஞ்சிக் கேட்கிறானோ அவனுக்குப் பல முறை கேட்டபின் பணமுள்ளவர் கொடுத்தால் அவன் அவர் பணத்திற்கு நல்ல பெயர் தருவான்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**இல்லாத தொடர்பை இருப்பதாகக் கொள்வது**

**குருடனின் பார்வை.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

381. தனக்குத் தகுந்த குருநாதர் கிடைப்பதோ, அல்லது சீடர் அமைவதோ சுலபமான காரியம் இல்லை. இரண்டு பேரிடத்திலும் உண்மையான ஆர்வம் இருந்தால் இருவரும் சந்தித்துக்கொள்ளும்படி வாய்ப்புகள் அமையும். எதிர்பார்த்தது ஒன்று, கிடைத்தது வேறு என்று ஆகிவிட்டால் தனக்கு அமைந்தவர் தன்னுடைய பிரதிபலிப்புஎன்று எடுத்துக்கொண்டு குரு-சிஷ்ய உறவை கூடுமானவரையிலும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

382. எந்த நேரத்தில் என்ன விதமான கட்டுப்பாட்டை அளிப்பதுஎன்ற உரிமை குருநாதருக்கு உண்டு. அந்த உரிமையை குருநாதருக்கு அளிக்க விரும்பாத சீடர்கள் அவரிடம் நெருக்கமாக இருக்கலாம்என்று எதிர்பார்க்க கூடாது. அவர்கள் முதலிலிருந்தே விலகி இருக்க வேண்டும்.

383. ஆன்மீகத் துறையில் தனக்கிருக்கும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் குருநாதர்கள் தம்முடைய ஆன்மீக நிலையிலிருந்து இறங்கிவிடுவார்கள். இந்த ஆபத்திலிருந்து அந்த நிலையில் இருப்பவர்கள் தங்களை எந்நேரமும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

384. குருநாதருடைய ஆசீர்வாதங்கள் சீடருடைய வாழ்க்கையில் செல்வ வளமாக கிடைக்கலாம். அப்படி ஆசீர்வாதம் ஐஸ்வர்யமாக மாற சீடருக்கு இருக்கின்ற மனோபாவம் பாஸிட்டிவ்வாக இருக்க வேண்டும். ஐஸ்வர்யம் ஆன்மீகத்திற்கு ஒவ்வாததுஎன்ற எண்ணம் இல்லாமல் இருக்க வேண்டும்.

385. வெளித்தோற்றத்தை வைத்து ஒரு குருநாதருடைய உள் பக்குவத்தை நிர்ணயிப்பது சுலபமில்லை. வெளித்தோற்றம் போலியாக இருந்தால் ஏமாற்றம்வர வாய்ப்புள்ளது.

386. குருநாதர் காலில் விழுந்து வணக்கம் செலுத்துவது சீடனுடைய சரணாகதியை அதிகரிக்க உதவும். ஆனால் மனதில் அந்தச் சரணாகதி இல்லாதபட்சத்தில் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாலும், அது

ஜீவனற்ற செயலாகவே இருக்கும்.

387. குருநாதருக்குக் கொடுக்கின்ற காணிக்கைகளை, சீடன் உடனடியாக மறப்பது நல்லது. அதை ஞாபகம் வைத்துக்கொள்வதென்பது காணிக்கையின் புனிதத்தைக் கெடுத்துவிடும்.

388. சீடனுடைய வயது குறைவாக இருக்கும்பட்சத்தில் குருநாதரால் சீடனை மேலும் பக்குவப்படுத்த முடியும். இளமையில் இருக்கும் வளையும்தன்மை வயது ஆக ஆகக் குறைந்துகொண்டே வரும்.

389. இறைவனுடன் உள்ளே தொடர்புகொள்ளும் ஆற்றல் பெற்றவர்களுக்குக் குருநாதருடைய வழிகாட்டல் தேவையில்லை. ஆனால் அந்தப் பக்குவம் இல்லாதவர்க்கு ஒரு குருநாதருடைய வழிக்காட்டுதல் தேவைப்படுகிறது.

390. குரு-சிஷ்ய உறவென்பது ஆன்மீகத்தோடு நிறுத்திக்கொள்ளப்பட வேண்டும் என்றில்லை. அந்த உறவில் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் மற்றும் வேலை சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் அறிவுரைகள் கேட்கலாம்.

391. சீடர்கள் எல்லோரையும் சமமாக பாவிப்பதென்பது சாத்தியமில்லை. ஏனென்றால் ஒருவருக்கு எது நல்லதோ அது அடுத்தவருக்கும் நல்லது என்பது வைத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு சீடரையும் குருநாதர் தனிப்பட்ட முறையில் புரிந்துகொண்டு அதற்கேற்றப்படி அவரை நடத்த வேண்டும்.

392. பெண் சீடர்கள் ஆண் சீடர்களைவிடப் பார்வைக்கு அதிக பவ்யமாக நடந்துகொள்வார்கள். ஆனால் உண்மையான சரணாகதிஎன்று எடுத்துக்கொண்டால் ஆணுக்கு எவ்வளவு கடினமோ அதே அளவுக்குத்தான் பெண்ணுக்கும் கடினம்.

393. சீடர்களுக்கிடையே குருநாதருடைய அபிமானச் சீடர் யார்என்று பேர் வாங்குவதில் பலத்த போட்டியிருக்கும். ஆனால் இந்தப் போட்டி, பொறாமைக்கெல்லாம் இடம் கொடுக்காமல் குருநாதர் எல்லோரிடமும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்.

394. குருநாதருக்குத் தொந்தரவாகச் செயல்படுவதாகப் பெயர் வாங்கும் சீடர்கள் தாமே அவரைவிட்டு விலகித் தம் மனநிலையைச் சரி செய்துகொண்டு தொந்தரவான அம்சங்களைக் களையெடுக்க வேண்டும்.

395. சீடர்கள் குருநாதருக்குத் தீய சக்திகளினுடைய தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கும் அரணாகச் செயல்படலாம். இப்படிப்பட்ட சேவை செய்ய விரும்புகின்ற சீடர்கள் பய உணர்விலிருந்து முற்றிலும் விடுபட்டு ஒரு சமநிலையில் இருக்க வேண்டும்.



396. குருநாதர் தவறுஎன்று கருதுகின்ற விஷயங்களை, சீடன் செய்யக்கூடாது. தம்முடைய தவறான செயல்பாடுகளுக்கு குருநாதருடைய ஆதரவைக் கேட்கின்ற சீடர்கள் இந்த இடத்தில் குரு-சிஷ்ய உறவைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.

397. பக்தர்களும் சீடர்களும் தரத்தில் வித்தியாசப்பட்டவர்கள். பக்தர்கள் பொதுவாக வாழ்க்கை முன்னேற்றத்திற்காக குருநாதருடைய ஆசியை நாடுவார்கள். சீடர்கள் ஆன்மீகமுன்னேற்றத்திற்காக குருநாதருடன் தொடர்புகொள்வார்கள். பக்தர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சீடர்கள் சமூகத்தைத் தாண்டி ஆன்மீகத்திற்கு வந்தவர்கள்.

398. ஹெர்மன் எஸ்சா என்ற ஜெர்மானிய எழுத்தாளருடைய நாவலில் வருகின்ற சித்தார்த்தன்என்ற கதாப்பாத்திரம் குருநாதருடைய வழிகாட்டலே இன்றி ஆன்மீகத்தில் முன்னேறிய ஒருவருக்கு உதாரணமாகச் சொல்லலாம். ஆனால் இப்படித் தாமே ஆன்மீகத்தில் முன்னேறுகின்ற நபர்கள் அரிது.

399. சீடர்களுடைய பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்து கண்டு பிரமிப்படையாத குருநாதர்கள் உண்மையில் ஆன்மீகப் பக்குவம் நிறைந்தவர்கள். தம்முடைய பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை வலியுறுத்தாத சீடர்களும் பக்குவம் நிறைந்தவர்கள்.

400. சமூகத்தில் பொதுவாக நம்மோடு சமநிலையில் இருப்பவர்களுடன்தான் நாம் பழகுவோம். நமக்குமேல் இருப்பவர்களிடம் நெருங்க நாம் தயங்குவோம். நமக்குக் கீழ் இருப்பவர்களிடம் இருந்து நாம் சற்று தள்ளி நிற்போம்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அருளால் நடந்ததைக் காரணத்தால் விளக்குபவர், நடப்பதற்கு முன் அதுபோன்ற விளக்கமளிக்க முன்வருவதில்லை.

***காரணம் கற்பிப்பவர் காரியத்திற்குமுன்னால் பேசுவதில்லை.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVIII. Mind and Supermind

The descent is accompanied by two things. Page No.163
One is an essential faculty. Para No.7
The other is the essential limitation.
They together fix Mind's nature and action.

The faculty is *svabhava*.
The limitation is *svadharma*.
Here is the mark of the divine fiat.
It assigned it its office.
Thus Mind becomes the instrument of the Supreme Maya.
It is from the self-conception of the Self-existent.
It was done at its very birth.
That office was determined then.
To translate infinity into finite is the office.

It is to measure off, limit, depiece.
It is done in our consciousness.
It is done by excluding the true sense of infinity.



## 18. மனமும் சத்தியஜீவியமும்

அருள்மழையுடன் வருவன இரண்டு.
ஒன்று அடிப்படைத் திறன்.
அடுத்தது அடிப்படை அளவீடு.
இவையிரண்டும் சேர்ந்து மனத்தின் சுபாவத்தையும் செயலையும் நிர்ணயிக்கின்றன.
இதன் பெயர் *சுபாவம்.*
அளவின் பெயர் *சுதர்மம்.*
தெய்வத்தின் சுவடு இங்கே தெரியும்.
மனம் அதன் உரிமையை இங்ஙனம் பெறுகிறது.
எனவே மனம் மாயையின் உயர்ந்த கருவியாகிறது.
சுய வாழ்வின் சுயக் கருத்தின் வெளிப்பாடு இது.
இதை மனம் பிறக்கும்பொழுதே பெறுகிறது.
அதன் வேலை அப்பொழுதே நிர்ணயிக்கப்படுகிறது.
அனந்தத்தை அந்தமாக - அகண்டத்தைக் கண்டமாகச் - செய்வது அவ்வேலை.
அளந்து, அளவீடிட்டு, துண்டாடுவது அது.
இதை நம் ஜீவியத்தில் செய்கிறோம்.
அனந்தத்தின் அதி உயர்வை விலக்கும் முறையிது.

Therefore Mind is the nodus of the great Ignorance.
It is because it divides and distributes.
Therefore Mind was mistaken for the cause of the universe.

It was mistaken for a while even as divine Maya.
But divine Maya comprehends Vidya and Avidya.
They are Knowledge as well as the Ignorance.
There must be the original consciousness.
It will include finite as well as infinite.
The finite is only the appearance of the infinite.
The finite is the result of the action of the infinite.
It is a play of the conception of the infinite.
The finite cannot exist except by the infinite.
The one is the background of the other.
It is itself the form of that stuff and action of that force.
The original consciousness contains both views.
It does so at the same time.
It is intimately conscious of the relationship of the one with the other.
In that consciousness there is no ignorance.
There the infinite is known.
The finite is not separated from the infinite.
The finite is not an independent reality.
Still there is a subordinate process.
It is a process of delimitation.
Otherwise no one could exist.
It is a process by which Mind, Life and Matter come into the phenomenal being.
The Mind divides and reunites.
Life is ever divergent and convergent.



எனவே மனம் அறியாமைக்கு அச்சாணி.
துண்டாடி, விநியோகம் செய்வது அதன் வேலை.
இக்காரணத்தால் மனம் உலகை சிருஷ்டித்ததுஎன நினைக்க வேண்டியதாயிற்று.
கொஞ்ச நாள்வரை மனத்தையே மாயையெனவும் கருதினர்.
தெய்வீகமாயைக்கு ஞானமும், அஞ்ஞானமும் புரியும்.
வித்யாஎன்பது ஞானம்; அவித்யாஎன்பது அஞ்ஞானம்.
இவையிரண்டையும் உட்கொண்ட ஆதி ஜீவியம் இருக்க வேண்டும்.
இதனுள் சிறியதும் பெரியதுமிருக்கும்.
சிறியது பெரியதன் தோற்றம்.
பெரியதன் செயலால் சிறியது ஏற்பட்டது.
அனந்த ஞானத்தின் லீலை இது.
சிறியது பெரியதன் ஆதரவின்றி இருக்க இயலாது.
ஒன்று மற்றதற்குப் பின்னணி.
அச்சக்தியின் செயலாகவும் அதன் ரூபமாகவும் அதுள்ளது.
ஆதி ஜீவியத்துள் இரண்டும் இணையும்.
ஒரே சமயத்தில் அது நடக்கும்.
சிறியதன் உறவு அதற்கு நெருக்கமாகத் தெரியும்.

அந்த ஜீவியத்துள் அஞ்ஞானமில்லை.
அங்கு அனந்தம் உண்டு.
சிறியது அங்குப் பெரியதினின்று பிரிக்கப்படவில்லை.
சிறியது தனித்தது அன்று.
இருப்பினும் முக்கியச் செயலுக்கு உபசெயலுண்டு.
இது வரையறைசெய்யும் வகை.
இல்லாவிட்டால் எதுவும் ஜீவிக்க முடியாது.
மனம், உயிர், உடல் இவ்வகைத் தோற்றமாக எழுந்தன.

மனம் பிரித்து இணைக்கிறது.
வாழ்வு விரியும், விரிந்து சுருங்கும்.

Substance is infinitely divided and self-aggregates.
All by one principle and one original act.
This is the subordinate process of the eternal Seer and Thinker.
It is perfectly luminous.
HE is perfectly aware of Himself and all.
He knows well what He does.
HE is conscious of the infinite and finite HE is creating.
It may be called the divine Mind.
It is obvious it is a subordinate process.
It is really not a separate process.
What works is the Real-Idea of the Supermind.
It works through the apprehending movement.
It is a movement of the Truth-Consciousness.

Prajnana is the apprehending consciousness. Page No.164
The All is indivisible. Para No.8
The All has a consciousness.
The indivisible All is working.
Prajnana places that working before the consciousness of the All.
The working is active and formative.
It is a process.
The working is the object of creative knowledge.
That consciousness is originative.
It is cognisant as a possessor.
It is the witness of its own working.
It is as the poet views his own poem.
The poem is the creation of his own consciousness.
The result looks as if it is different from its creator.
It is not even different from that creative force.
Yet it is self formation.



ஜடப்பொருள் அளவுகடந்து பகுக்கப்பட்டுத் தொகுக்கப்படுகிறது.
அனைத்திற்கும் ஒரே சட்டம், ஒரே செயல்.
ஞானியும் ரிஷியுமான இறைவனுக்கு இது உபசெயல்.
இது ஒளி பொருந்திய பாதை.
இதற்கு இறைவனையும் அனைத்தையும் தெரியும்.
தான் என்ன செய்கிறான்என அவன் அறிவான்.
தான் சிருஷ்டிக்கும் சிறியதையும் பெரியதையும் அவன் அறிவான்.
இதை தெய்வீகமனம் எனலாம்.
இது உபசெயல்என்பது தெளிவு.
இது தனிச் செயலன்று.
இங்குச் செயல்படுவது முழுஎண்ணம், சத்தியஜீவியம்.
இது பிரக்ஞா மூலம் செயல்படுகிறது.
இது சத்தியஜீவியத்தின் ஒரு சலனம்.

பிரக்ஞாஎன்பது காலத்துள் உள்ள சத்தியஜீவியம்.
முழுமைஎன்பது பகுக்கப்பட முடியாது.
முழுமைக்கு ஜீவியம் உண்டு.
முழுமை செயல்படுகிறது.
பிரக்ஞா முழுமையின் செயலை முழுமைமுன் வைக்கிறது.
அச்செயல்கள் தீவிரமானவை, ரூபம் பெறுபவை.
அது ஒரு முறை.
சிருஷ்டிக்குரிய ஞானத்திற்கு இவ்வேலைகள் ஓர் இலக்கு.
ஜீவியம் அவற்றின் உற்பத்தி ஸ்தானம்.
பெற்றதை ஆட்சி செய்யும் வகையில் ஜீவியம் அதை அறிகிறது.
தன் செயலுக்குத் தானே சாட்சி.
கவி தன் காவியத்தைக் காண்பதுபோல் முழுமை அதைக் கண்ணுறும்.
காவியம் தன் ஜீவியத்தின் செயல்எனக் கவி அறிவான்.
அப்படி நோக்குவதால் காவியம் கவியினின்று வேறுபட்டதாகத் தெரியும்.
உண்மையில் காவியம் சிருஷ்டிக்கும் சக்தியினின்று வேறுபட்டதன்று.
இருந்தாலும் அது தானே தன்னை ரூபம்பெறச் செய்தது.

It is so all the time.
It is no more than the play.
It is a self formation of his own being in itself.
It is indivisible from the creator.
It is the fundamental division.
It is made by Prajnana.
It leads to all the rest.
It creates the Purusha.
The Purusha is the conscious soul.
The Purusha knows and sees.
He creates by his vision.
He also ordains.
He creates Prakriti.
It is the Force-Soul.
It is called the Nature-Soul.
Prakriti is his knowledge and vision.
Prakriti is his creation.
It is his all-ordaining power.
Both – Purusha and Prakriti – are one Being.
Both are one existence.
We see the forms.
We see them created.
They are multiple forms.
They are forms of that Being.
It is placed by Him as knowledge before Himself as Knower.
It is again placed by Himself as Force before Himself as Creator.

The last action of the apprehending consciousness awaits.
It takes place when Purusha extends his being.
He is present at every point of himself.



இதுவே எப்பொழுதும் நடப்பது.
இது லீலைதவிர வேறேதுமில்லை.
இது கவியின் ஜீவன் தானே ரூபமெடுப்பது; தன்னுள்ளே ரூபம் பெறுவது.
காவியம் கவியிலிருந்து பிரிக்கப்பட முடியாதது.
இது அடிப்படைப் பிளவு.
இதைச் செய்வது பிரக்ஞா.
மற்றவை அனைத்தும் இதிலிருந்து எழுந்தவை.
இதுவே புருஷனை உற்பத்தி செய்கிறது.
புருஷன்என்பது விழிப்பான ஆத்மா.
புருஷனுக்குத் தெரியும். அவனுக்குப் பார்வையுண்டு.
அவன் சிருஷ்டியை அவனே சிருஷ்டிக்கிறான்.
நிர்வாகம் செய்வதும் அவனே.
பிரகிருதியை அவனே உற்பத்தி செய்கிறான்.
பிரகிருதிஎன்பது சக்தியின் ஆத்மா.
அது இயற்கையின் ஆத்மா.
பிரகிருதி அவனுடைய ஞானம், திருஷ்டி.
பிரகிருதி அவன் படைப்பு.
இது அவனது முழு நிர்வாகம்.
புருஷனும் பிரகிருதியும் ஒரே ஜீவன்.
இரண்டிற்கும் இருப்பு ஒன்றே.
நாம் ரூபங்கள்.
அவை உற்பத்தியாவதை நாம் காண்கிறோம்.
நாம் பல ரூபம் பெற்றிருக்கிறோம்.
அவை ஜீவனின் ரூபங்கள்.
அவன் முன்னே அறிபவனாக ஞானம் வருகிறது.
மீண்டும் அவன்முன்னே சிருஷ்டிக்கர்த்தாவாக, சக்தியாக அது வைக்கப்படுகிறது.
பிரக்ஞாவின் கடைசிச் செயல் காத்திருக்கிறது.
புருஷன் தன் ஜீவனை விரிவுபடுத்தும்பொழுது அது நடக்கிறது.
அவனே அனைத்துமாதலால் அவனுள் எல்லா இடங்களிலும் அவன் இருக்கிறான்.

He is also present in his totality.
He inhabits every form.
He regards the whole separately as if he views.
He views from each of the standpoints he has taken.
He views and governs the relations of each soul-form of himself with other soul-forms.
He does so from the standpoint of will and knowledge appropriate to each particular form.

Thus the elements of division have come into being. Page No.165 Para No.9

Three changes take place in infinity, omnipresent reality and the multiplicity of the soul-forms.
The infinity changes into Time and Space.
It does so in the extension of the One.
Time and Space are conceptual.
It is a translation.
The omnipresence changes into multiplicity.
It is a multiplicity of the conscious-soul.
It is done by the One by a self-conscious extension.
The multiplicity of the soul forms changes into divided habitations.
The conscious soul is the many Purushas of the Sankhya.
The divided habitation is of the extended unity.
The divided habitation is inevitable.
It is because the multiple Purushas do not each inhabit a separate world of their own.
They do not each possess a separate Prakriti.
They do not build a separate universe.
Rather, all enjoy the same Prakriti.



அவன் தன் முழுமையுள்ளும் இருக்கிறான்.
அவன் எல்லா ரூபங்களிலும் வதிகிறான்.
முழுமையைத் தான் காண்பதற்காக வேறாகக் காண்கிறான்.
அவன் பெற்ற ஒவ்வொரு கண்ணோட்டத்திலிருந்தும் அவன் காண்கிறான்.
ஒவ்வோர் ஆத்ம ரூபத்தையும் அதன் மற்ற ஆத்ம ரூபத்துடனுள்ள தொடர்பை அவன் கண்ணுற்று, நிர்வாகம் செய்கிறான்.
ஒவ்வோர் ஆத்ம ரூபத்திற்கும் பொருத்தமான கோணத்திலிருந்து ஞானம், உறுதி நோக்கால் அதைச் செய்கிறான்.

இவ்வழி பிரிவினைஎன்ற அம்சம் உற்பத்தியாகிறது.

அனந்தம், எங்கும் நிறை பரம்பொருள், ஆத்ம ரூபத்தின் அனந்த ரூபங்கள் ஆகியவற்றில் இம்மாறுதல்கள் நிகழ்கின்றன.
அனந்தம் காலமும் இடமுமாக மாறுகிறது.
ஒன்று தன்னை நீட்டுவதால் இது நிகழ்கிறது.
காலமும் இடமும் கருத்துக்குரியவை.
இது இடம் மாறுவது.
எங்கும் நிறைபவன் எல்லா ஜீவராசிகளுமாகிறான்.
பன்மைஎன்பது விழிப்பான ஆத்மாவுக்குரியது.
இதைச் செய்வது ஒன்று. தன்னை முனைந்து நீட்டுவதால் இது நடக்கிறது.
பல ஆத்மாக்கள் பல பிரிந்த நிலையிலுள்ள ஜீவன்களாகின்றனர்.

விழிப்பான ஆத்மாஎன்பது சாங்கியம் கூறும் பல புருஷர்கள்.
பிரிந்த ஜீவன்கள்என்பது ஐக்கியம் அடுத்த கட்டத்திற்குச் செல்வது.
பிரிந்த ஜீவன் தவிர்க்க முடியாதது.
பல ஜீவன்கள் ஒவ்வொன்றும் தனித்தனி பிரகிருதியைப் பெற்றிருக்கவில்லை என்பதால் ஏற்படுகிறது.
அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி பிரகிருதியில்லை.
அவை தனிப் பிரபஞ்சத்தை சிருஷ்டிப்பதில்லை.
அனைத்துப் புருஷர்களும் ஒரே பிரகிருதியை அனுபவிக்கின்றனர்.

(They must do as they are soul-forms of the One.
They are presiding over the multiple creations of His Power).

Yet, they have relations with each other.
The relations are in the one world of being created by the one Prakriti.
The Purusha in each form actively identifies himself with each.

He delimits himself in that.
He sets off his other forms against it in his consciousness.
That consciousness contains his other selves.
They are identical with him in being.
But they are different in relations.
It is different in various extent.
It is so in various range of movement and various view of one substance, force, consciousness and delight.
Each is actually deploying at any given moment all these or in any given field or space.
In the Divine Existence it is not a binding limitation.
It is granted.
It is perfectly aware of itself.
It is not an identification to which the soul is enslaved.
Nor is it incapable of exceeding the limits.
The identification with the body is an enslaving limitation.
The limitation of the conscious ego is binding.
One particular movement of our consciousness in Time determines our particular movement in Space.
Still, there is a free identification from moment to moment.
It is inalienable self-knowledge of the divine soul.
It will prevent the binding limitation.



(அவை ஒன்றின் ஆத்மரூபங்கள்என்பதால் அப்படிச் செய்கின்றன.
அவை அவனுடைய சக்தி ஏராளமாக சிருஷ்டிப்பதை தலைமை தாங்குகின்றன).
அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.
பிரகிருதி சிருஷ்டித்த ஒரே உலகில் இவ்வுறவுகள் உள்ளன.

ஒவ்வொன்றிலும் உள்ள புருஷன் மற்ற புருஷர்களுடன் தீவிரமாக இரண்டறக் கலக்கிறது.
தன்னை அதனுள் அவன் அடக்கிக்கொள்கிறான்.
பிற ரூபங்களைத் தன்ஜீவியத்தில் பிரதிபலிக்க அனுபவிக்கிறான்.
ஜீவியம் பிற ஆத்மாக்களைத் தன்னுட் கொண்டுள்ளது.
அவை ஜீவனில் அவனோடு ஒரே மாதிரியானவை.
அவை தொடர்பால் வேறுபடுகின்றன.
வேறுபாட்டின் அளவு மாறும்.
மாறும் வேறுபாட்டின் மாற்றங்கள் அப்படிப்பட்டவை. ஆனந்தம், ஜீவியம், சக்தி, பொருள் ஆகியவை மாறும்பொழுது மாறும்.
எந்த நேரமும் இவையெல்லாம் நடக்கின்றன. எந்த இடத்திலும் இவை நடந்தபடியிருக்கின்றன.
தெய்வீகவாழ்வில் இப்பிரிவினை அவசியமில்லை.
அதற்கு உத்தரவுண்டு.
அது தெளிவாகத் தன்னையறியும்.
இந்த ஒற்றுமைக்கு ஆத்மா அடிமையில்லை.
தன் எல்லையை அதனால் கடக்க முடியாது.
உடலோடு ஒன்றுவது ஒரு மீள முடியாத தடை.
விழிப்பான அகந்தையின் தடை தவிர்க்க முடியாதது.
காலத்தின் அசைவு இடத்தின் சலனத்தை நிர்ணயம் செய்யும்.

இருப்பினும், நிமிஷத்திற்கு நிமிஷம் சுதந்திரமான ஒற்றுமை எழுகிறது.
தெய்வீகஆத்மா பெற்ற விலக்க முடியாத சுயஞானம் இது.
மீளமுடியாத அடிமையை அது தடுக்கும்.

It is an apparent rigid chain of separation.
It is a succession in Time.
Our consciousness is fixed and chained.

*Contd....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நெருங்கி வாழ்ந்தால் ஜீவனற்று விரக்தி ஏற்படும். நிலை உயர்ந்தால் நெருக்கமான வாழ்வு நெருக்கத்தின் இனிமையையும் நிறைவையும் தரும்.

***ஆதாயம் முதல் நிலை. அர்ப்பணம் அடுத்தது.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெருமாறுதல், திடீரென எழும் வளர்ச்சி, அடிக்கடி அருள் செயல்படுதல் ஆகிய நிலையிலுள்ளவர்கட்கு, அடிக்கடி பரிசுகள் கிடைக்கும். எதிர்பாராத பெரும்பலன் வரும். அவர்கள் மனநிலையின் பக்குவத்திற்கேற்பவே அவை அமையும். சூழ்நிலையால் நிர்ணயிக்கப்படா. உண்மையில் அவை சூழலைச் சுட்டிக்காட்டுபவை. சூழல் அவர்களுக்கு அனுப்பும் அழைப்பாகவும் அமையும்.

***அதிக ஆர்வம் அனைவரையும் ஈர்க்கும்.***
***மேலும் உயர்வது தனிமையைத் தரும்.***



பிரிக்கும் தொடர் செயலுக்குரிய தோற்றம் அது.
அது காலத்திற்குரிய தொடர்.
நமது ஜீவியம் குறிப்பிடப்பட்டு விலங்கிடப்பட்டுள்ளது.

**தொடரும்.....**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எண்ணமும், உணர்வும், உடலுணர்வும் ஓரிடத்தில் மட்டும் செயல்படுபவை. மேல் மனத்தில் அவற்றால் ஒன்றுசேர இயலாது. ஆழத்தில் சேரும். அவை சேர்வது உள்ளே போகும் வழி.

***இணைந்த எழுச்சிகள் சேரும் ஆழம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஒரு கருத்து உன் எண்ணத்தில் பலமுறை வரலாம். ஒரு அனுபவம் பல்வேறு அளவுகளில் மனதில் மீண்டும் மீண்டும் வரலாம். பழைய கருத்து புதுவேகத்தோடு அடுத்த முறை மனதில் எழுந்தால் அது புதுக்கருத்தாகத் தோன்றும்.

பழைய அனுபவம் சற்று உயர்ந்து மீண்டும் வந்தால், அது புதுஅனுபவமாகத் தோன்றும்.

***மயிரிழை மாறினால் பழைய அனுபவம் புதியதாக இருக்கும்.***

**With the right intermediary making people Prime Ministers, Presidents is immediately possible.**
**In the terrestial condition things were done just like that while to obtain a visa or permit you have to move heaven and earth.**

**சரியான நபர்களும், சந்தர்ப்பங்களும் அமைந்தால் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஒருவரை நியமிப்பது சுலபம்.**
**புவியில் அதுபோலவே செயல்கள் நடக்கின்றன. ஆனால் ஒரு விசா அல்லது பெர்மிட்பெற மலையைப் புரட்ட வேண்டியிருக்கிறது.**

*அஜெண்டா*

✡ பணம், பாஸ்போர்ட், விசா, அனுபவமுள்ளவர் 24 மணி நேரத்தில் அமெரிக்கா போய், தாம் போய்ச் சேர்ந்த செய்தியைச் சொல்வார்.

ரோடில்லாத ஊருக்கு, பெரிய தலைச்சுமையுடன் பஸ்ஸில்போய் இறங்கி, 8 மைல் போய்ச் சேர 2 நாளில் முடியுமாஎன்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது.

❀ ரோடில்லாத ஊருக்குப்போக முடியாமல் தவிக்கும் மனிதனுக்குச் சுலபமாக அமெரிக்கா போக வழி செய்வது அன்னைச் சூழல்.

மனம் மாறினால் மலையைக் கடக்கலாம்.

இது அன்பர் அனுபவம்.



❀ அன்னையை முன்அனுப்பி, அவரை நம்பி, அவரை மட்டும் நம்பும் மனப்பான்மையுடன் செயல்படுவது அன்பருக்குரியது.

நமது பழக்கம், நம் வீட்டு வழக்கம், நம் நாட்டுப் பண்பு, நமக்கே பிடித்தமான வழிமுறைகள், நம் பரம்பரை, நம் தாயார்-தகப்பனார் கையாண்ட வழிகள், நம் ஜாதிக்குரிய சிறப்பு, நம்மூர் பெற்ற பேர் ஆகியவற்றை வலியுறுத்துவது நம் செயல்.

சிறியதைச் செய்யவும் நம்மால் இயலாது.

பெரியதும் எளிமையாக முடிவது அன்னையின் அருள்.

❀ ரூ.5 கடன்பெற நகையை ஈடுவைத்து, 5 நடை நடந்து, அநியாய வட்டி கொடுத்து, மனம் உடைந்து பெற்றவர்க்கு,

ரூ.10,000 கடன் கேட்காமல், இருக்குமிடம் தேடிவந்து, ரொக்கமாகக் கொடுத்தது அன்னை.

❀ 2500 மைல் பிரயாணம் செய்து, 20 பேரைச் சந்தித்து, ரூ.2,000/- செலவு செய்து, அவர்கள் வாக்கு கொடுத்த ரூ.20,000/-தைப் பெற முயன்று, 2000 ரூபாய் பெற்றவருக்கு,

- ★ அவர் நம்பாத பொழுது, அவரால் நம்ப முடியாமல் கேலி செய்த பொழுது,
- ★ ரூ.10,000 வசூல் செய்ய முனைந்தவர், கேட்காமல், வெளியில் சொல்லாமல், ரூ.1,63,000 வசூலானபின், தொடர்ந்து ரூ.75,000 வசூலானது அன்னை செயல்.

அன்னை அளிக்கும் அபரிமிதமான அருளை அலட்சியம் செய்வதும், அர்த்தமற்ற நம் பழக்கத்தைப் பெருமையாக வலியுறுத்தி வலியை அனுபவிப்பதும், மனிதன் யுகாந்த காலமாகக் கைக்கொண்டதுஎன்பதை அஜெண்டாவில் தலைப்பில் கூறியதின் மூலம் அன்னை எடுத்துக் கூறுகிறார்.

❀❀❀

# மனிதனுடைய சாதனை

கர்மயோகி

அருள் முடித்ததை மனிதன் பெறுவது மனிதனுடைய சாதனை.

கடையில் நாம் துணிவாங்கினால், துணியை நாம் நெய்யவில்லை.

துணி உற்பத்தியாகி கடைக்கு வந்ததை நாம் விலைக்குப் பெறுகிறோம்.

நாமே துணியை நெய்ததாக நாம் நினைப்பதில்லை.

ஆனால் வீடு கட்டும் பொழுது நாம் கட்டியதாக நினைக்கிறோம்.

அருள் சூட்சுமத்தில் செயல்படுகிறது.

வீடு சூட்சுமத்தில் உருவாகி, கட்டி முடிக்கப்பட்டபின், நமக்கு வீடு கட்டத் தோன்றுகிறது.

நம் பங்கு கல், மண், சிமெண்ட் போன்றவற்றை வீடு கட்டும் இடத்திற்குக் கொண்டுவந்து, சூட்சுமத்தில் உருவான வீட்டை, வீடாக ஏற்பது.

கடையில் துணிக்கு விலை தருவதுபோல், வீடு கட்ட நாம் பல வேலைகளைச் செய்கிறோம்.

துணி ஏற்கனவே உற்பத்தியாகாவிட்டால், நாம் கடையில் அதை வாங்க முடியாது.

வீடு சூட்சுமத்தில் தயாராக இல்லாவிட்டால், நம்மால் கல், சிமெண்ட் சேகரிக்க முடியாது.

சேகரித்தாலும், அது வீடாகாது.

ஒருவாய் தண்ணீர் சாப்பிடவும் சூட்சுமத்தில் ஏற்கனவே அது முடிந்திருக்க வேண்டும்.

இல்லையேல் அத்தண்ணீர் கிடைக்காது.

இறக்கும் தருவாயில் ஒருவாய் தண்ணீர் கிடைக்காத பெருந்தனவான் ஒருவர்.

**அவனன்றி ஓரணுவும் அசையாதுஎன்பது இவ்விளக்கம்**.

மேற்கூறியது பொது விதி.

சிறப்பான நிலைகளுண்டு.



அதைப் பேரருள்எனவும், அருள் காத்திருக்கிறதுஎனவும் மகான்கள் அறிவார்கள்.

**நாம் தேடுவதை அருள் முன்கூட்டி முடித்து வந்து, பெறக்காத்திருப்பது அது**.

வேலை முடிந்துவிட்டதுஎன அறியாமல், நாம் நம் வழக்கப்படி அதற்காக நமக்குத் தெரிந்த வழிகளில் முனைந்து, அதனால் கால தாமதமாகிப் பெறும் நிலையில், 'நீங்கள்வர நாங்கள் காத்திருந்தோம்'எனக் கேள்விப்பட்டு ஆச்சரியப்படுகிறோம்.

கர்மத்தை நம்பினால், கர்மம் செயல்படும்.

கர்மத்தை நம்பாவிட்டால், கர்மம் விலகும்,

அருள் செயல்படும்.

அருளின்செயலை நம் திறமையால் பெறமுயன்றால், நம் திறமைக்குரிய காலமும், பலனும் வரும்.

நம் திறமையை நம்பாமல், அருளைமட்டும் நம்பினால், **அருள் பேரருளாகி, முடிவான பலன் முதலிலேயே, க்ஷணத்தில் கிடைக்கும்**.

நம்மால் கர்மத்தை நம்பாமலிருக்க முடிவதில்லை.

நம் திறமையை நம்பாமலிருக்க முடிவதில்லை.

அறிவால் செயல்பட்டால், திறமை தேவைப்படும்.

ஆத்மாவால் செயல்பட்டால், திறமை தானே விலகும்.

நாம் எதுவும் அறியாதநேரம் அறிவை நம்ப முடியாதுஎன்பதால், பேரருள் செயல்பட்டு, தொண்டன் MLA, மந்திரியாவதைக் காண்கிறோம். 'இதெல்லாம் நான் நினைக்கவில்லை' என்று அந்தநேரம் கூறுகிறார்கள்.

விஷயம் தெரியாத பொழுது அறிவு செயல்படுவதில்லைஎன்பதுபோல், விஷயம் முழுவதும் தெரியும்பொழுது அறிவு அதை எள்ளளவும் நம்ப மறுப்பது பேரருள் செயல்பட உதவும்.

❀ **தொடர்ந்த அழைப்பால் பேரருள் செயல்படுகிறது.**

**தொடர்ந்த நினைவு அருளை அழைக்கிறது.**

**அழைப்பு நினைவை செயல்படச் செய்து, அருள் பேரருளாகிறது.**

❀ **அந்நிலையில் ஏற்கனவே காரியம் முழுவதும் முடிந்து, காத்திருப்பது தெரியும்.**

❀ **நினைவு இனித்து, அழைப்பாகமாறி, உணர்வு உருக்கமாகமாறி, உடல் சிலிர்க்கும்நேரம், பேரருள் செயல்படும்நேரம்.**

❀ **பிரார்த்தனையால் முடிந்த காரியங்களில் நாம் இதைக் காண்கிறோம்.**

வரன் கூடிவந்தபின், 6 மாதம் முன்பே வரன் இம்முடிவை எடுத்துக் காத்திருந்தது தெரிய வருகிறது.

அன்பர் வரவுக்காக பாலைவனத்தில் பிரம்மாண்டமான நீரூற்று அடிமட்டத்தினின்று மேலேவந்து, கிணறு தோண்டக் காத்திருந்தது.

எந்தப் பதவியை நினைக்க முடியாதோ, அப்பதவியை அன்பருக்கு அளிக்க முடிவுசெய்து, அவர் விண்ணப்பத்திற்காகக் காத்திருப்பது அருளின் வழக்கம்.

படிப்பு வாராதவர், படிக்கப் பிடிக்காதவர், படிக்க மறுப்பவர் அருள் சூழலில் வந்தபின் படிக்கவேயில்லை என்பதையும்மீறி, அருள் அவருக்குப் பட்டமும், பதவியும் கொடுக்கக் காத்திருந்தபொழுது, பரீட்சையில் 60 பக்கம் எழுத வேண்டிய இடத்தில் 2 பக்கம் எழுதினார். இத்தனையையும்மீறி அருள் அவருக்குப் பட்டமும், பதவியும் அளித்தது என் சொந்த அனுபவத்தில் கண்டது.

❀ **மனிதன் சாதிக்க வேலை செய்ய வேண்டும்.**

**வேலை பலன்தர அனுபவம் வேண்டும்.**

**அனுபவம் திறமையானால், திறமைக்குத் தகுந்த பலன்வரும்.**

**அனுபவம் தருவது உழைப்பு.**

**உழைப்பின் அனுபவம் திறமையாகி, திறமை செயலில் பலன் தருவது ஆர்வத்தைப் பொருத்தது.**

**ஆர்வம் ஏற்பட உழைப்பு இனிக்க வேண்டும்.**

**உழைப்பு, திறமையாவதை உள்ளம் ஏற்க வேண்டும்.**

**ஆர்வம் உழைப்பைவிட அதிகப் பலன் தரும்.**

**ஆர்வம் ஏற்பட அறிவு வேண்டும்.**



**அறிவு ஆர்வத்தைவிட அதிகப் பலன்தரும்.**

**அதிகம் என்பது அபரிமிதம்.**

**அறிவுதரும் பலன் தெளிவைப் பொருத்தது.**

**தெளிவு நிதானத்தைப் பொருத்தது.**

**நிதானம்தரும் பலன் பண்பைப் பொருத்தது.**

**பண்பு ஆன்மாவுக்குரியது.**

**உழைப்பு அனுபவத்தால் திறமையாகி, ஆர்வத்தால் பூரித்து, அறிவால் அபரிமிதமாகி, தெளிவாலும், நிதானத்தாலும், பண்பாலும் பூரணம் பெறுகிறது.**

**அதனால் ஆர்வமுள்ளவன் மேஸ்திரியாகிறான்.**

**உழைப்பவன் கூலிக்காரனாகிறான்.**

**அறிவுள்ளவன் முதலாளியாகிறான்.**

**நிதானமும், தெளிவுமுள்ளவன் பெருமுதலாளியாகிறான்.**

**உழைப்பை மனம் விரும்பிஏற்றால், உடனே உழைப்பைக் கடந்து ஆர்வம் எழும்.**

**ஆர்வத்தை அறிவுஏற்றால், ஆர்வத்தின்பலன் வரும்.**

**நிதானமும், தெளிவும், அறிவின் பலனைத்தரும்.**

***எல்லாப்பண்புகளையும் தன்னுட்கொண்ட பண்பு அடக்கம்.***

உழைப்புக்குத் தயாரான ஆர்வமுள்ளவன் அறிவாளியானால், அவனுக்கு அடக்கம் இயல்பாக இருந்தால் - அல்லது முயன்று பெற்றால் - அவன் எந்த முயற்சி எடுத்தாலும், பலன் முன்கூட்டி முடிந்து, காத்திருப்பது அவனது சூட்சுமப்பார்வைக்குத் தெரியும்.

தன்னை நம்பாமல், அடக்கமாக, ஆர்வமாகச் செயல்பட்டால், சிறிதளவு உழைப்புக்குப் பெரும்பலன் உடனே வரும். ஒருமணிஅரிசி கிருஷ்ண பரமாத்மா சாப்பிட்டது, வந்த ரிஷிகள் அனைவர் பசியையும் போக்கியது, அன்பர் வாழ்வில் இன்று காணக்கூடியது.

❀ **அருள் கண்ணுக்குத் தெரிய வேண்டும்.**

**பேரருள் சூட்சுமத்திற்குப் புரிய வேண்டும்.**

**அருளையும், பேரருளையும் கடந்த அன்னை நெஞ்சத்தைத் தொடுவார்.**

***அன்னை ஸ்பர்சம் ஆன்மீகஅடக்கம்.***

❀ **அடக்கம் அன்னையுள் நம்மை அடக்கம் செய்யும்.**

**அன்னையுள் அடங்கியவர் அடக்கம் பெற்றவர்.**

**அடக்கம் அன்னைஎன்றால் மிகையாகாது.**

**அன்னை அடக்கம் தருவார்என்பது உண்மையென்றாலும்,**

**நடைமுறையில் அன்னை நம் அகந்தைக்கு உயிர் கொடுப்பார்என்பது அனுபவம்.**

**It is the human choice.**

**மனிதன் அன்னையை அடக்கமாகப் பெறுவது அவன் பங்கு.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு கட்சி தன் பரமவைரியைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது அன்னையின்சக்தி செயல்படுவதாகும். அது போன்ற செயல்கள் அன்னையின் ஆட்சியில் ஆன்மீக உண்மையைச் சுட்டிக்காட்டும் அறிகுறியாகும்.

***ஆன்மீக உண்மையைச் சுட்டிக்காட்டும் அன்னையின் அறிகுறி.***





# படகு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

விடை பெற்று வீட்டிற்குச் சென்றாள். அவர்கள் வாழும் ஆரோக்கியமான வாழ்வு மேன்மேலும் மனத்திரையில் ஓடி மகிழ்வு அளித்தது. அவர்களைப்பற்றி எண்ணிப் பார்த்தாள். அவர்களில் யாரும் சாப்பாட்டிற்கு இல்லைஎன்று அங்கு வேலைக்கு வரவில்லை. யாரும் படிப்பறிவு இல்லாதவர்களும் இல்லை. வயது வித்தியாசம் எதுவும் பாராட்டவில்லை. வெளியுலகின் போட்டி, பொறாமை, அகங்காரங்களிலிருந்து விடுபட்டு, வேலையை அர்ப்பணமாகச் செய்து, இலாப நோக்கம் ஏதுமின்றி, தம்மைப்பற்றிய கர்வம் ஏதுமின்றி, தம்மை இறைவனின் கருவி என்றுணர்ந்து வாழ்ந்து, உயர்உணர்வு ஒன்றே குறிக்கோளாய் ஓரினமாய்த் தோன்றுவதே இவர்கள் இலட்சியமாயிருந்தது.

ஏனோ அந்த அமைப்பு அவளை மிகவும் கவர்ந்தது. மறுநாள் மாலையும் சென்றாள். இப்போது சிலர் இரவுநேர உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

ஆண்டாளம்மா தோட்டத்திலிருந்தார். உள்ளே சென்ற இவள் யாரை அழைப்பதுஎன்று யோசித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த லலிதா இவளைப் பார்த்துவிட்டு, ''வா, பவானி. அம்மா தோட்டத்திலிருக்கிறார். போய்ப்பார்க்கலாம், போ'' என்றாள்.

நேரே பின்புறத் தோட்டத்திற்குச் சென்றாள். பின்புறம் கூரை இறக்கி, இரண்டு புறமும் சிறுதிண்ணைகள் இருந்தன. அங்கு ஆண்டாளம்மா உட்கார்ந்திருந்தார்.

''வா, பவானி. நீ தோட்டத்தைப் பார்த்ததில்லையல்லவா? சுற்றிப் பார்'' என்றாள்.

அழகழகான பூஞ்செடிகள் வரிசையாய் நடப்பட்டு நீரூற்ற பாத்தி இருந்தது. சில நிழல்தரும் மரங்களும் ஆங்காங்கே இருந்தன.

அவையும் கொத்துக்கொத்தாய் சிவப்பும் மஞ்சளும் நீலமுமாய்ப் பூத்திருந்தன. தோட்டத்தின் இரண்டுகோடியிலும் சிறுசிறு மண்டபம் போன்ற அமைப்புகள் இருந்தன. அவற்றுள் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் புனிதச்சின்னங்கள் இடம்பெற்றிருந்தன. சற்று உயரிய மேடைபோன்ற அமைப்பில் தண்ணீர் ஊற்றி பூக்கள் இட்டு வைக்க ஏதுவாய் குழிவான அமைப்புஒன்று சின்னங்களுக்கு முன்பு இருந்தது. அதில் சில அல்லிமலர்கள் இடப்பட்டிருந்தன. அழகிய நீண்ட தரையும் மேல்கூரை அமைப்பும் உட்கார்ந்து தியானம் செய்ய பொருத்தமாய் இருந்தது.

மணம் வீசும் செடிகளுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தனர் சிலர். சிலர் பூக்களை ஒருதட்டில் வைத்துக்கொண்டு, அதன் முன்னமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தனர். அமைதியும் தூய்மையான அழகும் திகழும் நந்தவனமாய்க் காட்சியளித்தது தோட்டம். எத்தனை அழகான சூழல்கள் இங்குஎன்று வியந்தாள். சில நிமிடங்கள் தியானம் செய்துவிட்டுத் திரும்பினாள்.

மறுநாள் காலையும் வந்தாள். சில புதியஅன்பர்கள் சமையற் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவள் அறிந்த பிரேமா, லலிதா, சுகுமார், பரிமளம் இவர்களைக் காணவில்லை.

நேரே தோட்டத்திற்குச் சென்று சிறிது தியானம் செய்தாள். பிறகு மரம், செடி, கொடிகளை ஒருமுறை ஆவலுடன் பார்த்தாள். பக்கத்தில் ஓர் இரும்புக்கதவு தெரிந்தது. அதன் வழியே பக்கத்துக் கட்டடத்திற்குச் செல்ல முடியும். இப்போதுதான் கவனித்தாள், அழகான கட்டடம் தெரிந்தது. ஆவலுடன் பார்த்தாள்.

அங்கு வந்த ஆண்டாளம்மா, ''என்ன பவானி, பார்க்கிறாய்? பள்ளிக்கூடக் கட்டடத்தையா? அதுதான் நம் பள்ளிக்கூடம். போய்ப் பார்த்து வருவோமா?'' என்றாள்.

''ஆமாம், அம்மா. போய்ப் பார்க்கலாம், வாருங்கள். எனக்குப் பள்ளிக்கூடம், சிறு குழந்தைகள் மிகவும் பிடிக்கும்'' என்றாள் ஆவல் பொங்க.

கம்பிக் கதவின் மேல் கொக்கியை விலக்கிக் கதவைத் திறந்த ஆண்டாளம்மா, ''வா பவானி. வந்துபார்'' என்றாள். சுற்றிலும் திறந்த வெளி. நான்கு புறமும் தூண்கள் போல் விரிந்து பரந்த ஆலமரம்.



'ப' வடிவில் நடுவே வகுப்பு அறைகள். அறைகளில் கரும்பலகை உண்டு. ஆசிரியர் அமர நாற்காலி, மாணவர்களுக்கு மேசை, பெஞ்சு எதுவும் இல்லை. பெரிய பாய்விரிப்புகள் தரையில். 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். பிரேமா அவர்களை விளையாட்டில் ஆர்வமூட்டி உடனிருந்து பார்த்துக் கொள்கிறாள். குழந்தைகள் அவளையும் தங்கள்விளையாட்டில் சேர்த்துக்கொள்கின்றனர். நான்கு முதல் ஐந்து வயதுடைய குழந்தைகள் வட்டம், சதுரம், கட்டம் போன்ற பல பொருட்களைப் பிரித்தும் சேர்த்தும் ஆர்வமாய் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆறு வயது முதல் எட்டு வயது வரை உள்ள குழந்தைகள் கரும்பலகையில் எழுதிக் கொண்டிருந்தனர். சில பிரிவினர் எழுத்துகள் எழுதிப் பயின்றனர். இன்னும்சிலர் சொற்களை எழுதிப் பயின்றனர். சில குழந்தைகள் எழுத்துகளை எழுத, சில குழந்தைகள் அவற்றின் பெயர்களைக் கூற, சில குழந்தைகள் சரியா, தவறாஎனக் கண்டுபிடிக்க, உற்சாகமாய் அதை ஒரு விளையாட்டுப் போல் செய்தனர். சொற்களைப் பயிலும் மாணவர்கள் 'சொற்கட்டடம்' என்னும் விளையாட்டினை விளையாடுவதன்மூலம் அதிக சொற்களைப் பயின்றனர். பக்கத்தில் சுகுமார், லலிதா, பரிமளம் இவர்கள் அமர்ந்து வழிகாட்டினார்கள். அது ஒரு விளையாட்டுப் போலிருந்ததே தவிர கடினமாய் உழைப்பதுபோல் குழந்தைகளுக்கு அலுப்பூட்டவில்லை. தெய்வஅன்பு, தெய்வநம்பிக்கை, நல்லெண்ணம் ஆகியவற்றின் நன்மைகளைச் சிறுசிறு பாடல்களாக அமைத்து எளிய இசையில் பாடினர். எப்போதுமே குழந்தைகளுக்குப் பாட்டும், இசையும் விருப்பமுடையனவானதால் கோரஸாகப் பாடி, அபிநயம் செய்தனர். இன்னும் சிலகுழந்தைகள் கதை சொல்வதன் மூலம் தம் கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வதுடன் நாட்டுப்பற்று, நட்பு, இறையன்பு பற்றியெல்லாம் தம்தம் ஆர்வங்களை வெளிப்படுத்தினர். அன்பர்கள் அக்குழந்தைகளுடன் தாமும் ஒருவராகக் கலந்துகொண்டு உற்சாகப்படுத்தினரேதவிர 'கற்பித்தல்-ஆசிரியர்' என்ற வடிவமே இல்லை.

அவர்களுக்குச் சுத்தம், ஒழுங்கு, உண்மை போன்றவை திணிக்கப்படாமலே தாமே ஏற்கும்படித் தாங்கள் நடந்து கொண்டு

அன்பர்கள் வழிகாட்டினர். அதுவொரு புதிய தெய்வீக உலகமாய் இருந்தது.

தெய்வஉணர்வில் எதையும் சாதிக்க முடியும்என்பது இங்கு மையக் கருத்தாக இருந்தது. குழந்தைகள் இயல்பாக வரிசை முறையைப் பின்பற்ற அறிந்திருந்தனர். இடத்தை அசுத்தம் செய்யாது இருந்தனர். சப்தமிட்டுப் பேசாமலும், கீழ்த்தரமான சொற்களைப் பயன்படுத்தாமலும், அழகாக நடந்துகொண்டனர். வகுப்பறைகளை அழகாக வைத்துக்கொண்டனர்.

பவானிக்கு மனநிறைவாக இருந்தது. இந்தக் குழந்தைகளில், கள்ளமில்லாத அன்பில் தானும் கலந்துவிட ஆசைப்பட்டாள்.

''அங்கு மெஸ்ஸில் அன்பர்கள் பணிசெய்வது, இங்கு, பள்ளியில் குழந்தைகளை அழகுற நடத்துவது, யாவுமே மிகவும் அழகாக இருக்கிறதம்மா. இந்தப் புதுயுகம் விரிந்து பரவ வேண்டும்என்று மனம் ஏங்குகிறது'' என்றாள் பவானி.

''இங்குப் பள்ளிக்கூடத்திலும், அங்கு மெஸ்ஸிலும் நாங்கள் அன்னையைப் பின்பற்றுகிறோம். செய்யும் பணியைத் திருத்தமாகவும், அர்ப்பணிப்பாகவும் செய்யும் முறையில் மெஸ் நடக்கிறது. நம் நாட்டின் செல்வங்கள் குழந்தைகள். அவர்கள் அன்னை முறையில் உருவானால், எதிர்காலம் உலகிற்கே வழிகாட்டியாக நம்மை ஏற்கும். ஸ்ரீ அன்னை குழந்தைகளைப்பற்றிக் கூறும்போது, 'ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பனைத் திறன், புதிய சொற்களை அறியும்ஊக்கம், நாடகத் திறன், கருத்துச்செறிவு ஆகியவை இயல்பாகவே உண்டு. இந்தத் திறமைகளையெல்லாம் ஊக்குவித்து, இலக்கியத்திலும் நாட்டு வரலாற்றிலும் அவனை ஈடுபடுத்த வேண்டும். இந்தப் பருவத்தில்தான் தார்மீகப்பண்பு, சிந்தனாசக்தி ஆகியவை முழுமை எய்துவதற்கான முயற்சியைத் தொடங்க வேண்டும். சுவைபடப் பேசுவது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். வீரநாயகன்மீது *(Hero worship)* அபிமானம் ஏற்படும் பருவமிது. நாட்டுப்பற்றும் குழந்தைகளுக்கு இயல்பாகவே உண்டு. குழந்தையுள்ளம் வினாக்களுக்கு விளைநிலம். புதிய கண்டுபிடிப்பில் ஆர்வம் கொண்டவன் குழந்தை. நிர்தாட்சண்யமான விமரிசகன் அவன். பொருள்களை அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்துப் பார்ப்பதில் துடிப்பாக இருப்பவன். இத்தகைய



குழந்தையை அவனுடைய இப்பண்புகளைக்கொண்டே ஊக்குவித்து, அவன் அறிவியல் வல்லுநனாக ஆவதற்குத் துணைபுரியலாம். நுண் பொருள்களை ஆராயும் மனப்பான்மையுள்ள சிறுவனை உலகின் நுணுக்கங்களை ஆராயும் அறிஞனாக உதவலாம். கற்பனைத் திறன்மிக்கவனைக் கலைஞன்ஆக ஊக்குவிக்கலாம்' என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்களை இங்குப் பயிற்ற ஆர்வப்படுகிறோம்'' என்றாள் ஆண்டாளம்மா.

''ஆமாமம்மா, நான்கூட நேற்று பகவானின் புத்தகம் ஒன்றைப் படித்தேன். அதிலும், 'வளருகின்ற ஒரு ஜீவன் தனது சிறப்பம்சத்தை வெளியே கொண்டுவந்து, அதனை உன்னத நோக்கத்திற்காகப் பயன்படச் செய்ய உதவுவதுதான் கல்வியின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்' என்று படித்தேன்'' என்றாள் பவானி.

''நாங்கள் குழந்தைகளுக்குப் புரியவைக்க நினைப்பனவெல்லாம் மூன்று கருத்துகள். அதாவது,

1. எந்தச் சூழ்நிலையிலும் பொய் பேசுதல் கூடாது,
2. வன்முறை, ஆத்திரம், கோபம், இவற்றை அடக்கத் தெரிய வேண்டும்,
3. தெய்வத்தினிடம் பூரணபக்தி வேண்டும்,

என்பதே" என்றாள் ஆண்டாளம்மா.

இதற்கிடையில் வீட்டில் இவள் சகோதர, சகோதரிகள் வந்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். இவள் முப்பது வயதை எட்டிவிட்டதால் இவளை இரண்டாந் தாரமாகக் கேட்டனராம். இவர்களும் ஒப்புக்கொண்டனராம். இதில் பவானிக்கு வருத்தம் என்னவென்றால் மணக்கப்போகும் ஆண்மகன் இவள் ஆர்வத்திற்கும், இவளுடன் ஆன்மீகப்படியில் ஏறுவதற்கும் துணைவர விரும்பவில்லை. இவள் காசும், இவளிடம் காமமுமே அவன் தேவையாயிருந்தது என்பதுதான்.

அவள் இதில் தனக்கு விருப்பமில்லைஎன்று கூறிவிட்டாள். பிள்ளை வீட்டார், ''இவளுக்குத் திமிர்'' என்று பேசிவிட்டுப் போயினர். உடன்பிறப்புகள் இவளால் தங்களுக்கு அவமானம்என்று ஏசிவிட்டுப் போயினர். அவள் நலத்தில் உரிமையுள்ள அவர்கள் பேச்சைக் கேட்காததனால் துன்பப்பட நேரும்என்று அச்சுறுத்தினர்.

தனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் வேண்டும்என்று நயமாகக் கூறினாள் பவானி.

''உனக்கொரு கல்யாணத்தை முடித்து, உன்னை ஒருவன் கையில் ஒப்படைத்துவிட்டால் நாங்கள் நிம்மதியாகப் போவோம்'' என்றனர்.

மறுநாள் காலை ஆண்டாளம்மா வீட்டிற்குச் சென்றாள். மெஸ் வாயில் சார்த்தியிருந்தது. வீட்டுவாயில் திறந்திருந்தது. உள்ளே சென்று முன்புறம் நின்றுகொண்டு, ''அம்மா'' என்றழைத்தாள் பவானி.

லலிதா வந்தாள். ''வா, பவானி'' என்றாள்.

''ஏன் மெஸ் வாயில் சார்த்தியிருக்கிறது?'' என்றாள் பவானி.

''ஓ! அதுவா, இன்று முதல் தேதியல்லவா? இன்று சுபிட்ச தினம். இன்று மெஸ் கிடையாது. வீடு, கடை, யாவற்றையும் முழுச் சுத்தம் செய்து, மாலையில் தியானம் செய்வோம்'' என்றாள் லலிதா.

''முழுச்சுத்தம்என்றால் என்ன செய்வீர்கள்?'' என்றாள் பவானி.

''தினமும் வீட்டையும் கடையையும் பெருக்கித் துடைப்பது போல் மட்டுமல்லாது, ஒவ்வோர் இடத்தையும், ஒவ்வொரு பொருளையும் சுத்தம் செய்வோம். வீடு, கடை ஒட்டடை நீக்குவோம். புக் ஷெல்ப் துடைத்து, ஒவ்வொரு புத்தகத்தையும் எடுத்துத் துடைத்து வைப்போம். அடிக்கடி பயன்படுத்தாத பொருட்களையும் எடுத்து சுத்தம்செய்து வைப்போம். மெழுகுதல், கழுவுதல்எல்லாம் உண்டு'' என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

புத்தக அறைக்கு வந்தாள். எல்லாப் புத்தகங்களையும் அலமாரியிலிருந்து கீழே இறக்கும் வேலையில் சுகுமாரும் பிரேமாவும் ஈடுபட்டிருந்தனர்.

''உங்களிடம் ஒரு கருத்துக் கேட்கவேண்டும். இடைஞ்சலாக எண்ணமாட்டீர்களே?'' என்று மெல்லக் கேட்டாள் பவானி.

''தைரியமாய்க் கேள் பவானி. ஓர் இடைஞ்சலுமில்லை'' என்றாள் பிரேமா.

தானும் அவர்கள்பணியைப் பகிர்ந்துகொண்டு, ''நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதிருப்பதற்கு என்ன காரணம்? ஆர்வமில்லை என்பதாலா, அமையவில்லை என்பதாலா?'' என்று கேட்டாள்.



''என்னைப் பொருத்தவரை 'திருமணம் செய்து கொண்டுதான் வாழவேண்டும், இல்லையென்றால் துன்பம்' என்ற கருத்தை மாற்றிக் காட்ட வேண்டும்என்று திருமணம் செய்து கொள்ளவில்லை'' என்றாள் பிரேமா.

''என்னைப் பொருத்தவரை வாழ்க்கையை இரண்டு விதமாக வாழக்கூடும். சாதாரண ஆசைகளை நிறைவேற்றிக்கொண்டு, பெருமையுடன் வாழும் சாதாரண வாழ்க்கை. அசாதாரணமான உயர் உணர்வுகளுடன் வாழும் ஆன்மீகவாழ்க்கை. சாதாரணவாழ்விற்கு ஜோடி அமைவது சுலபம். பொருத்தமில்லையென்றாலும் சண்டை, சச்சரவுடன் வாழ்வது இயல்பாகிவிடும். ஏனென்றால் அவர்கள் சாதாரணமானவர்கள். ஆனால், அசாதாரணம்என்பதற்கு ஏற்ற ஜோடி அமைவது கடினம். மேலும் ஆண்டவனை நோக்கும் அந்த ஆன்மீக வாழ்வில் ஆண்டவனே நமக்கு ஜோடியாக அமைந்துவிடுவதால் திருமணம் என்றவொன்று தேவையில்லாதது. இதுதான் என் கருத்து'' என்றான் சுகுமார்.

''என்றாவது, 'அதை இழந்துவிட்டோமேஎன்ற ஏக்கம் வருமோ?' என்ற பயம் இல்லையா?'' என்றாள் பவானி.

''இல்லை பவானி. திருமணமே வாழ்வில்லை. அது வாழ்வில் ஒரு பகுதிதான். அதற்கென ஏற்பட்டுள்ள சம்பிரதாயங்களும் சடங்குகளும் மனிதனே ஏற்படுத்திக்கொண்டவைதாம். ஒழுக்கக் கேடு நேருமோஎன்ற அச்சவுணர்வுதான் திருமணத்திற்குக் காரணம். திருமணம்என்ற போர்வைக்குள் புகுந்துகொண்டு ஒழுக்கக்கேடு விளைவிக்கின்ற மனிதர்களில்லையா என்ன? ஒவ்வொருவரும் சுயக் கட்டுப்பாட்டுடன் வாழ முடிவுசெய்தால் திருமணம்என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்திராது. அந்த வாழ்வை விரும்புகின்றவர்களுக்கு அது உரியதே. வேண்டாதவர்களுக்குக் கட்டாயமில்லை. என்னைப் பொருத்தவரை ஸ்ரீ அன்னை கூறிய திருமணப் பொருளை உணர்ந்து செய்துகொள்ளும் திருமணமே சிறந்தது'' என்றான் சுகுமார்.

''ஸ்ரீ அன்னை என்ன கூறியிருக்கிறார்?'' என்றாள்.

''பிறந்தகுலம், நாடு, சூழ்நிலை, கற்ற கல்வி, இவற்றால் தீண்டப்படாது, ஜீவனின் ஆழங்களில், ஜீவனின்மையத்தில், ஜீவனின்

சிகரத்தில் ஒரு பரமசத்தியம் உள்ளது. ஒரு நித்தியஜோதி உள்ளது. அதன் உணர்வில் ஒன்று சேருவதுதான் உண்மையான ஒன்று சேருதல். ஆர்வத்திலும், ஆன்மீகப்படிகளில் ஏறுவதிலும் ஒன்றாக இருக்க வேண்டும். நிலைத்த திருமணத்தின்ரகசியம் இதுவேஎன்று ஸ்ரீ அன்னை ஓரிடத்தில் கூறியிருக்கிறார்'' என்றான் சுகுமார்.

''நம் திருமணங்கள் பெரும்பாலும் அழகு, அந்தஸ்து, காம நுகர்ச்சி இதனடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. அது சரி, இதெல்லாம் எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்றான் சுகுமார்.

''சில தினங்களாக, இங்கு வந்து இந்த அன்னை குடும்பத்தைப் பார்த்ததில் எனக்கு இதில் ஈடுபாடு வந்தது. நானும் உங்களில் ஒருத்தியாய் இந்தத் தவவாழ்வு வாழ ஆசைப்பட்டேன். என் உறவினர்கள், 'திருமணம் அவசியம். இல்லையென்றால் பாதுகாப்பு இராது' என்று வற்புறுத்துகின்றனர். என்னால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அதனால் உங்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டால் ஒரு வழிபுரியும் என்றெண்ணிக் கேட்டேன்'' என்றாள் பவானி.

''இப்போது என்ன வழி புரிந்தது?'' என்றாள் பிரேமா.

''இறைவன் எனக்களித்த அற்புத ஜீவனை, உணர்ச்சிகளுக்கு இரையாக்கி வீணாக்க விரும்பவில்லை. ஸ்ரீ அன்னை கூறியதுபோல் ஆன்மீகப்படிகளில் ஏறத் துணைவரும் ஆடவரைத்தான் மணப்பேன். இல்லையென்றால் ஆண்டவனையே துணைக்கழைப்பேன்'' என்றாள் பவானி.

''ஆன்மீகவாழ்வில் நாட்டம் இருக்குமளவிற்கு மனோதிடம் இல்லாததுதான் குறைபாடு. அந்தத் திடமும் செயல்பாடும் உடைய உங்களில் ஒருத்தியாக வாழ முடிவு செய்துவிட்டேன்'' என்றாள்.

வீட்டில் எல்லோரும் இவள் பதிலுக்குக் காத்திருந்தனர். இவள் அன்னைகுடும்பத்தில் சேரப் போவதாகக் கூறிவிட்டாள்.

அனைவரும் அதிர்ந்தனர். ''நீ எல்லாவற்றையும் துறந்து ஒரு தெய்வீகவாழ்க்கை வாழ்வதானால் உனக்கெதற்கு இந்தச் சொத்து? அதையேனும் எங்களுக்குப் பகிர்ந்தளித்தால் என்றேனும் உனக்குக் கஷ்டம் வந்தால் நாங்கள் உனக்கு உதவுவோமே'' என்றனர்.

அதற்கும் அவள் ஒரு பதில் வைத்திருந்தாள்.



''நீங்கள் நினைப்பதுபோல் பணம்என்பது நம் விருப்பத்திற்குச் செலவு செய்வதற்காக ஏற்பட்டதன்று. அதன் வடிவம்தான் மனிதன் அமைத்தது. அதற்குள் மறைந்திருக்கும் ஆற்றல் இறைவனால் பூவுலகிற்கு அனுப்பப்பட்டது. தெய்வசக்தியை ஏற்று, அவற்றை வெளிப்படுத்துவதற்கு இந்த உலகைத் தயாரிக்கும் பணிக்காக இறைவனால் அனுப்பப்பட்ட விஸ்வசக்தியது. மிக உண்மையான, மிக விரிவான எண்ணமுடையவர் கைக்கே பணம் போகவேண்டும் என்பது ஸ்ரீ அன்னையின் கருத்து. அன்னைகுடும்பத்து ஆண்டாளம்மா மிக விசாலமான எண்ணமுடையவர். குழந்தைப் பருவத்திலேயே அன்னையின் வழியில் ஜீவர்களைப் பக்குவப்படுத்த பாலர் பள்ளி நிறுவி, அதன் வளர்ச்சிக்காக பாடுபடுகிறார்கள். அத்தை தன் இறுதிக் காலத்தை அன்னை குடும்பத்தில் கழிக்கப் போவதாய்க் கூறுவார்கள். எனவே, அவர்கள்சொத்து அதன் பணிகளுக்குப் பயன்படுவதே முறை. எனவே, இதை நான் அங்குக் கொடுத்துவிடப்போகிறேன். 'பிள்ளை இல்லா சொத்து கொள்ளை போகிறது' என்ற சொல்லுக்கே இடமில்லை'' என்றாள்.

''நீ பணத்தைக்கொண்டு அங்குக் கொடுத்தாலும் அவர்கள் அதை நன்முறையில் பயன்படுத்துவார்கள்என்று எப்படி நம்ப முடியும்?'' என்றனர் சகோதரர்கள்.

''அங்கிருப்பவர்கள் யாரும் பிழைக்க வந்தவர்களிலர். எல்லோருமே பெரும்பாலும் செல்வர்கள்தாம். பணத்தைத் தங்களுக்கென்று வைத்துக்கொள்ளாமல் பள்ளி வளர்ச்சிக்கு, மெஸ்ஸின் தேவைகளுக்குஎன்று முதலீடு செய்துவிட்டு, வரும் லாபத்தை மேன்மேலும் அன்னை முறைக்கே செலவிட்டுவிட்டு, தங்களுக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமல், பிறர் கூறும் குற்றங்களைப் பொருட்படுத்தாமல், பாராட்டுகளையும் எதிர்பாராமல் அழகானதொரு வாழ்வு வாழ்கிறார்கள். அங்கு அமைதியைத் தவிர பூசல் இல்லை. சூழல் நாளுக்குநாள் வலுக்கிறது. அன்னை விரும்பும் புதியஇனத் தோற்றத்திற்கு உரிய வழி அதுஎன என் உள்ளம் நம்புகிறது'' என்றாள் பவானி.

''நீ சொல்வது எல்லாமே சரிதான். என்றாலும், நன்றி கெட்டதனமாக, நாங்கள் உன்மீது வைத்துள்ள பாசத்தை உதறிவிட்டு,

உன் சிறுபருவத்தில் உன் அக்காள்களும், அண்ணியரும் உனக்குச் செய்த பணிவிடைகளையெல்லாம் மறந்துவிட்டுப் போகிறாயே, இந்த நன்றியில்லாத செயல்தான் உன் அன்னை முறையா?'' என்று கோபித்துக் கொண்டு போயினர்.

ஒருவாறு மனம் தேறி, நல்ல வழியைக் கண்டுபிடித்த பவானி இந்தக் கோபத்தால், பேச்சால் மீண்டும் குழப்பத்திற்கு ஆளானாள். காரணம், சிறு பருவத்தில் பெற்றோர், சகோதர, சகோதரியர்என்ற சூழலில் வளர்ந்த வாழ்வு. இவள் உடல்நலம் பாதிக்கப்பட்டபோது அத்தனை பேரும் பதறிப்போய் இவளைக் குணப்படுத்த பட்டபாடுகள் எத்தனை! அதெல்லாம் இப்போது நினைவிற்கு வந்தது.

அன்று மாலை ஐந்து மணியிருக்கும். பள்ளிக்கூடம் முடிந்து பிள்ளைகள் கூட்டமாகவும் தனியாகவும் அவரவர் வீடுகளை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர். பவானியும் தன் தோழியர்கள் அவரவர் தெரு வழியே பிரிந்தவுடன் தன் வீடிருக்கும் தெருவிற்குத் தனியே வந்துகொண்டிருந்தாள். வழியில் ஒரே கூச்சல், குழப்பம். இரண்டு தரப்பினர் தங்களுக்குள் வாய்ப்பேச்சு முற்றி அடிதடியில் இறங்கினர். இரண்டு பக்கமும் ஆட்கள் கூடி சண்டை வலுத்தது. இடையில் வருவோர்க்கெல்லாம் அடி. சிறுமியான பவானி செய்வதறியாது அச்சத்தால் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்து வீட்டருகே பேச்சு, மூச்சின்றி விழுந்தாள். உறவினர், தெருவினர் கூடி இவளை மருத்துவமனையில் சேர்த்தனர். உயிர் பிழைப்பதே பெரும்பாடாயிற்று. இரவு, பகல் உறக்கமின்றி, உணவின்றி பெற்றோரும், உடன் பிறந்தவர்களும் இவள் பிழைப்பதற்காகக் காத்துக் கிடந்தனர். உயிர் பிழைத்துவிட்டாள். உடல் தேறவில்லை. இதயம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் பஞ்சிற்குள் வைத்துக் காப்பதுபோல் மிக மென்மையாக இவளைக் கையாள வேண்டியிருந்தது. பாசம் காரணமாக இவர்கள் இவளை நீராட்டி, சோறூட்டி ஒரு சிறு குழந்தையைப்போல் காப்பாற்றினர். ஆனால் இந்தப் பணிவிடைகள் ஒரு முடிவிற்கு வருவதாய் இல்லை. புதியபுதிய மருத்துவ முறைகள், புதியபுதிய சோதிடப் பரிகாரங்கள் செய்துசெய்து அலுத்துப்போகும் அளவிற்கு ஆகிவிட்டது. சகோதரிகள் திருமணத்தால் செலவு. சகோதரர்கள் தத்தம் குழந்தை வளர்ப்பு, குடும்பப் பொறுப்புஎன்று



ஆனவுடன் இவளுக்குச் செலவிட முடியவில்லை. வருமானமில்லாத தந்தை. வீட்டிற்கே இவள் பெரும் பிரச்சினையாகிக் கொண்டிருந்த போதுதான் கைம்பெண் கோலத்துடன் அத்தை வந்தாள். இவள் தன் பெற்றோர்க்குச் சுமக்க முடியாத பாரமாய் ஆகிக்கொண்டிருந்த நேரம். அத்தை இவளைத் தன் மகளாய்ச் சுவீகரித்துக் கொண்டாள். பொறுப்பு விட்டதாலோ என்னவோ பெற்றோர் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்தனர்.

அத்தை தன் கைம்மைக் கோலத்தைப் புனிதப்படுத்த ஆன்மீகத்தில் ஈடுபட்டபோது ஸ்ரீ அன்னை கிடைத்தார். அன்னையின் அருளால் பவானி நலமடைவாள்என்று நம்பி அவளை தியான மையம் அழைத்துச் சென்று, காணிக்கை சமர்ப்பித்து, பிரார்த்தனை செய்து, பவானியை ஸ்ரீ அன்னையின் திருவடிகளில் சமர்ப்பித்த போதுதான் பவானி நலமடையத் தொடங்கினாள். பேசினாள், நடந்தாள், தன் தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொண்டாள். இளம் வயதில் பற்றிய நலக்குறைவு இளமை கடந்தபின் இவளை விட்டு ஓடியது. அன்னையின் அற்புதம் மலர்ந்தது. அத்தையும் மறைந்தாள்.

இன்று தன் சகோதரர்கள் தன்னை நன்றி கெட்டவள்என்று கூறுவதும் பொருத்தம்தான். ஆரம்பத்தில் அவர்கள் தன் பொருட்டு பணத்தையும் பாசத்தையும் கொட்டவில்லையா? தான் நீண்ட காலம் நோயாளியாக இருந்ததால் அவர்களுக்கும் சிறிது அலுப்பு வருவது இயல்புதானே? மற்றபடி அவர்கள் பாசம் பொய்யாகுமா? என்று சிந்தித்தாள். சுயமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய காலத்தில் அவள் பாசத்தின் அரவணைப்பில் கிடந்தாள். அதன் விளைவே இந்தக் குழப்பம்.

எப்படியும் இன்று ஒரு சரியான முடிவு எடுத்துவிட வேண்டும் என்றெண்ணி மீண்டும் ஆண்டாளம்மாவின் அன்னை குடும்பத்திற்குப் போனாள்.

பவானியின் முகத்தில் குழப்பம், ஆண்டாளம்மாவுக்குப் புரிந்தது.

அங்குள்ளவர் ஒவ்வொருவர் முகத்திலும் தெளிவிருந்தது. செயலில் நேர்த்தியிருந்தது. எதனோடும் ஒட்டிக் கொள்ளாமலும், எதனையும் வெறுத்தொதுக்காமலும் இயல்பாக இருந்தனர். சாதனை புரிந்த பெருமிதமோ, இழந்தோம் என்ற ஏக்கமோ எதுவுமில்லை.

சமநிலைஎன்பது இதுவோ? அவரவர், அவரவர்க்கு இயன்ற வேலையை எதிர்பார்ப்பு எதுவுமின்றி அமைதியாகச் செய்து கொண்டிருந்தனர். இந்தச் சமநிலை தனக்கும் வருமா? என்று எண்ணினாள் பவானி.

''வாம்மா, பவானி'' என்றாள் ஆண்டாளம்மா.

''அம்மா, நீங்கள் வாழ்வில் மிகவும் கஷ்டப்பட்டவர். இந்த அன்னைவழிவாழ்வை ஏற்றபின் உங்கள் கடந்த கால நிகழ்ச்சிகள் எதையும் நினைப்பதில்லையா? அவை உங்கள் மனதைப் பாதித்த போது எப்படி உங்களை மாற்றிக் கொள்ள முடிந்தது?'' என்றாள் பவானி.

''உறவு, நட்பு, சமூகத்தின் விசேஷங்கள், பரம்பரைப் பழக்கம், பாசம், நாலுபேர் என்ன சொல்லுவார்கள்என்ற நினைவு, வெற்றியைப் பாராட்டுதல், தோல்வியால் துவளுதல், போட்டி மனப்பான்மை, செல்வம், செல்வாக்குப் போன்றவற்றைப் பாராட்டுதல், யாவுமே பழைய வாழ்வின் பகுதிகள். அவை நம்மை ஈர்க்கும். அதற்கு இடம் கொடுத்தால் பழைய வாழ்வு திரும்பும். அவற்றைக் கடப்பவர்க்கே அன்னைவாழ்வு. கடந்த காலப் பழக்க வழக்கங்கள் கடைசிவரை பக்தனைத் தொடரும். கடைசிவரை அவற்றை உதறித் தள்ள வேண்டும். ஆன்மாவின் வழிப்படி நடப்பதுதான் அன்னை வாழ்வு. வாழ்வு மையத்திலிருந்து அன்னைமையத்திற்கு வருவதே ஜீவியம் மலரும் வழிஎன்பதைத் தியானமையச் சொற்பொழிவில் கேட்டறிந்தேன். அது மட்டுமன்று, பயமும் சந்தேகமும் அன்பர்களை என்னிடமிருந்து விலகச் செய்யும் வழிகள்என்று அன்னை கூறியிருக்கிறார். எனவே, அதற்கெல்லாம் இடம் கொடுப்பதில்லை எனத் தள்ளிவிட்டோம்'' என்றார் ஆண்டாளம்மா.

திகைத்து நின்றாள் பவானி.

''பவானி, நான் ஒரு கதை சொல்லட்டுமா?'' என்றான் சுகுமார்.

''சொல்லுங்கள்'' என்றாள் பவானி.

''நீந்தத் தெரியாத ஒருவன் ஆற்றில் விழுந்துவிட்டான். கரையேறத் தவித்தான். கடவுளே என்னைக் காப்பாற்றுஎன்று கதறினான். ஒரு படகு அருகில் வந்தது. அதன் மூலம் கரையேறினான். படகின்மீது நன்றியும் பிரியமும் எழுந்தது. இந்தப் படகைத் தனியே விட்டுவிட்டுச் செல்வது சரியா? என்று வருந்தினான். அப்போது



கரையில் ஒரு தெய்வம் தோன்றி இவனைப் பார்த்துச் சிரித்தது.

'ஏன் சிரிக்கிறீர்?' என்றான் கரையேறியவன்.

'கரையேற வேண்டும்என்று என்னை வேண்டினாய். படகு அனுப்பினேன். அனுப்பிய என்னை விட்டுவிட்டுப் படகை எண்ணிக் கொண்டிருக்கிறாய்' என்று கூறியது.

இதுதான் கதை. என்ன புரிந்தது உங்களுக்கு?'' என்றான் சுகுமார்.

''நன்றி சுகுமார். மிகவும் நன்றி. என் குழப்பத்திற்குச் சரியான தெளிவு கிடைத்துவிட்டது. காப்பாற்றுபவர்களும், காப்பாற்றப்பட்டவர்களும் கடவுளின் கருவிகளே. அவை தாமே இயங்கவில்லை. அவற்றை இயக்குபவர் இறைவனே. எல்லாம் இறைவனுக்கே உரியன என்று புரிந்து கொண்டேன். இம்முறை நான் திரும்பிப் போகமாட்டேன்'' என்று கூறியவண்ணம் தோட்டத்திலுள்ள தியான மண்டபத்தை நோக்கிச் சென்றுவிட்டாள் பவானி.

அவள் அன்னை குடும்பத்தில் சேர்ந்துவிட்டாள்.

*முற்றும்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பரிசுத்தமானவரை, சுத்தம் குறைந்தவன் துரோகம் செய்கிறான்என நாம் நம்புவது உண்மையன்று. உண்மையில் ஒரு வகையான குறைவை, அடுத்த வகையான குறைவு சந்திக்கிறது. நிலைமை தெளிவாக உள்ளது. குருட்டு அகங்காரம் தன் பெருமையை இவ்வகையில் நிலைநிறுத்த முயல்கிறது.

***வேறுபட்ட குறைகளை நல்லது, கெட்டது என்கிறோம்.***

## அனந்தம்என்பது ஒரே சமயத்தில் மூலமான சாரமுடையது, அளவுகடந்த பெரிய தொகுப்பானது, பல்வகைச் சிறப்புடையது (*P.331*)

அந்தம்என்பது முடிவு. முடிவற்றதை அனந்தம் என்றனர். நம்மூரிலிருந்து சென்னைக்கு ஒரு ரோடு போகிறது. அது சென்னையுடன் முடியவில்லை. அங்கிருந்து டெல்லிக்குப் போகிறது. டெல்லியிலிருந்து சிம்லா போகிறது. இந்த ரோடு எந்த ஊருடனும் முடியவில்லை என்பதால் நாம் இதை அனந்தம்எனக் கூறலாம். *முடிவற்றதை நாம் அனந்தம்என இதுவரை அறிவோம்.* பகவான் தலைப்பில் கூறிய அனந்தம் பிரம்மத்தைப் பற்றியது. அது இப்பொருளுக்குக் கட்டுப்படாது. பிரம்மத்தின் அனந்தத்தைக் குறிக்கும். அதன் அம்சங்களை உபநிஷதம், கீதை கூறியுள்ளன.

1. **அந்தமில்லை என்பதுடன் ஆதியுமற்றது. 'ஆதியும் அந்தமும் அற்றவன்'.**
2. **பிரிந்து தோன்றுவது, ஆனால் பிரிக்க முடியாதது.**
3. **அசைவற்றது, ஆனால் நமக்குமுன் செல்வது.**
4. **அகண்டமாகவும் அணுவாகவும் ஒரே சமயத்திலிருப்பது.**
5. **எடுக்கஎடுக்க குறையாதது.**
6. **அழிவற்றது, அழிக்க முடியாதது, அழியாதது.**
7. **சுதந்திரத்தின் எல்லா அம்சங்களையும் உடையது. *(உதாரணமாக சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரமும் உடையது).***
8. **எதையும் நிர்ணயிக்கக்கூடியது. எந்த நிர்ணயத்திற்கும் கட்டுப்படாதது.**

பிரம்மம், புருஷா, ஈஸ்வராஎன்ற அத்தியாயத்தில் (Book II, Chapter 11) பகவான், பிரம்மம் மனத்திற்கும், தெய்வீக



மனத்திற்கும், சத்தியஜீவியத்திற்கும் எப்படித் தெரிகிறதுஎனக் கூறுகிறார். அத்துடன் பிரம்மத்தின் காலத்தை (காலமும், கடந்ததும் இணைந்தது) விளக்குகிறார். இதுவரை இந்துமத தத்துவ மரபிலில்லாத கருத்து அது. *அங்கு மரணம், தீமை, வலி, நோய், துன்பமில்லைஎனவும், அனைத்தும் க்ஷணத்தில் நடக்கும்எனவும் விளக்கிக் கூறுகிறார். அதுவே பகவான் கூறும் அற்புதம்.* தத்துவமாகக் கூறும்பொழுது அதற்கு மூன்று அம்சங்களைக் கூறுகிறார். பிரம்மத்தின் அம்சம் மூலமானது. பிரபஞ்சத்தின் அம்சம் தொகுப்பானது. தனி மனிதனான ஜீவாத்மாவின் அம்சம் பல்வகைப்பட்டதுஎன்பது தலைப்பு குறிக்கிறது. அதன் சிறுஅம்சத்தை - ஓர் அம்சத்தை - நாம் காமதேனு, கற்பக விருக்ஷம், பிரம்ம தண்டம்என அறிவோம். உலகில் அனைத்துப் பொருள்களும் எல்லா நேரமும் காமதேனுவாகவும் கற்பக விருக்ஷமாகவும் பிரம்ம தண்டமாகவும் உள்ள லோகம் சத்தியஜீவியம் வந்து எழுப்பப்போகும் அற்புத லோகம்என்கிறார். இவை அந்த லோகத்தில் நிரந்தரமான குணங்களாக அமையும்என்கிறார் பகவான். பூலோகம், பிரபஞ்சம், பிரம்ம லோகம் மூன்றும் சேர்ந்த நிலைஎன்பதை மூலம்-சாரம் எனவும், பெரிய தொகுப்புஎனவும், பல்வகைச் சிறப்புஎனவும் சேர்த்து - அனந்தம்எனக் குறிப்பிடுகிறார்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உனக்குரியதை அனுபவிக்காமலிருப்பதும், உரிமையில்லாததை அனுபவிக்க விரும்புவதும் மன்னிக்க முடியாதது. (கடைசி வரை ஏற்றுக்கொள்ளாததால் அது பூர்த்தியாகாமல் இருக்கிறது).

***உள்ளதை உள்ளபடி ஏற்பதவசியம்.***

# அன்பான அமிர்த அபரிமிதம்

கர்மயோகி

- ✡ கண்டு கொண்டால் சித்திக்கும்.
- ✡ கண்டு கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் தவறாது சித்திக்கும்.
- ✡ கண்டு கொண்டால் அருள் சித்திக்கும், கண்டு கொள்ளாவிட்டால் அதிர்ஷ்டம் சித்திக்கும்.
  அருள் என்பது அனைவரும் பெறும் அதிர்ஷ்டம்.
- ✡ மூலவனே முறை.
- ✡ சிறியது சிறப்பானால், பெரியது பலிக்கும்.
- ✡ மூலம் புரிந்தவர்க்கு மூலையிலும் தெரியும்.
- ✡ திருமணம் சொர்க்க வாயில்.
- ✡ ஆத்மா கண்டதை அறிவு மறக்காது.
- ✡ ஆண்டவனுக்குச் செய்யும் சேவை அனைவருக்கும் செய்யும் சேவை.
- ✡ மனிதனுக்குச் சேவையுரியதல்ல.
- ✡ மனிதனுக்குச் செய்யும் சேவை மரணத்தை உறுதிப்படுத்தும்.
- ✡ விலகியவரை விரும்பி நாடும் மனம் திருவுருமாறாது.
  விலகியவரும் விரும்பி நாடும் வழி நடப்பது திருவுருமாற்றம்.
- ✡ உலகம் சிறியது, உள்ளொளி பெரியது.
- ✡ புறத்தில் காண்பது உலகமல்ல, தோற்றம்.
- ✡ உலகமும், பிரபஞ்சமும், பிரம்மமும் உள்ளேயுள்ளன. வெளியில் எதுவும் இல்லை.
- ✡ நிர்மலமானது நிதர்சனமானது.
- ✡ ஆதாயம் ஆண்டவனை விலக்கும், அனைத்தையும் விலக்கும்.
- ✡ புனர்ஜன்மம் தேவையில்லாதவர்க்குப் பூர்வஜன்மம் தெரியும்.
- ✡ பிறரில் காணாத பிரம்மம் பிரம்மமில்லை.
- ✡ மௌனம் விரதம்.
  மௌனத்தைக் கடந்த மௌனம் ஆனந்தம்.
- ✡ எவருக்கும் வேண்டாதவனுக்கு, அனைவரும் வேண்டும்.
- ✡ கேட்பது உலகம், பெறுவது பிரபஞ்சம்.
- ✡ உள்ளம் திருவுள்ளமாவது திருவுருமாற்றம்.
- ✡ அக்ஷர பிரம்மம் முடிவில்லை; ஸ்ரீ அரவிந்த பிரம்மமே முடிவு.
- ✡ அக்ஷரத்தைக் கடந்த ஸ்ரீ அரவிந்தம்.
- ✡ எது வந்தாலும் முடிவில்லாமல் வரும்.
  வரும் வழி நமக்கேற்றதாகும்.
- ✡ எந்த நேரமும் பிரம்மம் இடையறாது கொடுத்துக் கொண்டிருக்கிறது.
  நாம் பெறுவது நாம் கேட்பது.
  பிரம்மம் கொடுக்கத் தயாராக இருக்கிறது, நாம் கேட்பதில்லை.
  கேட்கும் பொழுது எதைக் கேட்பது என அறிவதில்லை.
- ✡ சரணாகதி எளியது, பெரியது.
  பெரியது மிக எளியது.
  எளியது பெரியது என்பது பிரம்ம ஞானம்.
- ✡ நம்பிக்கை உடனே பலிக்கும்.
  க்ஷணத்தில் பலிக்காதது அருளல்ல.

❀ ❀ ❀



# பிரச்சினைகளை மறக்கும்பொழுது அவை மறைகின்றன

N. அசோகன்

பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய ஆன்மீகச் சிந்தனைகளில் ஓர் ஆன்மா அதை பிடித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளை மறக்கும் பொழுது அவை மறைந்துபோவதைக் கண்டு, அந்த ஆன்மா அதிசயப்படுகிறதுஎன்று குறிப்பிட்டுள்ளார். ஏன் மறக்கும்பொழுது பிரச்சினை தீர்கிறதுஎன்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய பொதுவான பழக்கம் என்னவென்றால், நம்மைப் பாதித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளைப்பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டிருப்போம். அப்படி நாம் கவலைப்படும்பொழுது அந்தப் பிரச்சினைக்கு நாம் மேலும் எனர்ஜியைத்தான் கொடுக்கிறோம்என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சொல்கிறார். ஆனால் நாம் பிரச்சினையை மறக்கும்பொழுது அந்த பிரச்சினையிலிருந்து விடுபடக்கூடிய மனோதிடம் நமக்கு இருப்பதாக அர்த்தமாகிறது. அந்த மனோதிடத்தை வாழ்க்கை மதிக்கிறது. அதனால் நம் பிரச்சினைகளைத் தீர்க்க அது நடவடிக்கை எடுக்கிறது.

இதை நாம் கருதிப் பார்க்கும்பொழுது தம்முடைய ஏழ்மை, வியாதி, கடன், தோல்வி, போன்றவற்றைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பிரச்சினையில் மேலும்மேலும் மூழ்கிப்போகிறார்கள்என்றாகிறது. மாறாக, தம்முடைய ஏழ்மை, வியாதி, கடன், தோல்வி, ஆகியவற்றை மறந்துப்போகின்றவர்கள் தம்முடைய மனோபலத்தை அதிகரித்துக் கொள்கிறார்கள் என்றாகிறது. தம்முடைய மனோபலத்தை அதிகரித்துக் கொள்ளும் பொழுது அந்தப் பிரச்சினையும் அவர்களுக்குத் தீர்ந்துபோகிறது.

அப்பிரச்சினையைப்பற்றி நாம் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறோம்என்றால், நாம் அப்பிரச்சினையை அன்னையிடம் ஒப்படைக்கவே இல்லைஎன்றாகிறது. நல்ல வேலை தமக்கு வேண்டும் என்று அன்னையிடம் பிரார்த்தனை செய்கின்ற ஒருவர் பிரார்த்தனை செய்த பிறகும் தொடர்ந்து, 'தமக்கு வேலை கிடைக்குமா?' என்று

கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அன்னைமேல் அவருக்கு முழு நம்பிக்கை இல்லைஎன்று அர்த்தம். மாறாக, அன்னையிடம் பிரார்த்தனை செய்தபிறகு 'வேலை இல்லை' என்ற பிரச்சினையை அவர் மறந்துவிடுகிறார், அவருக்கு சந்தோஷம் வருகிறதுஎன்றால், அவர் உண்மையிலேயே அப்பிரச்சினையை அன்னையிடம் ஒப்படைத்துவிட்டார்என்று அர்த்தமாகிறது. இப்பொழுதே வேலை கிடைத்துவிட்டதுஎன்ற நம்பிக்கை அவருக்கு வருகிறதென்றால், அந்நம்பிக்கை அவருக்கு சந்தோஷத்தை அளிக்கும்.

இதிலிருந்து கவலைஎன்பது நம்பிக்கையின்மைக்கு ஓர் அறிகுறி என்று தெரிகிறது. கவலைப்படுகின்றவர்கள் தங்களுடைய அறிவைத்தான் நம்புகிறார்களேயொழிய அன்னையின் அருளை நம்புவதில்லை. அன்னைக்கு பிரார்த்தனை செய்தவுடன் அந்தப் பிரச்சினையை நாம் மறந்துவிடுகிறோமென்றால், அருள் நம் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்துவைக்குமென்ற நம்பிக்கை நம் மனதில் பிறந்துவிட்டதாக அர்த்தம்.

நன்றாக ஆர்கனைஸாகியிருக்கின்ற மனிதனுடைய பர்சனாலிட்டி மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் எதிர்க்கிறது என்று ஸ்ரீ கர்மயோகி சொல்லியிருக்கின்றார். ஒரு கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கும்பொழுது ஆர்கனைஸேஷன் நல்லது என்று தெரிகிறது. அதே சமயத்தில் ஆர்கனைஸேஷன் இறுகிப்போகும் பொழுது இந்த இறுக்கமே மாற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. பல பழமைவாய்ந்த ஸ்தாபனங்கள் இப்படி இறுகிப்போய் மாற்றத்தை எதிர்க்கின்றன. அப்படி ஆர்கனைஸேஷன் மாற்றத்திற்கு எதிரியாகும் பொழுது மனிதனுக்கு அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டும்என்றால், ஆர்கனைஸேஷன்என்ற கட்டுப்பாட்டிற்குள் வாராத இடங்கள் அவனுடைய பர்சனாலிட்டியிலிருந்தால், அவற்றின் மூலம்தான் அதிர்ஷ்டம் வரும்என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறியிருக்கிறார்.

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# பணவரவு

## *வரவு பெருக செலவு பெருக வேண்டும் - அன்னை*

இது ஓர் ஆன்மீகஉண்மை, சூட்சுமஉண்மை. பணத்திற்கு மட்டும் உண்மையன்று. அன்பிற்கும், அனைத்திற்கும் பொதுவான ஆன்மீக சூட்சுமஉண்மை. அன்பை அளவு கடந்து பெற, அபரிமிதமாக அதைப் பிறருக்குத் தர வேண்டும். ஒரு பொருளாதார நிபுணர், இந்த உண்மையை அறிந்தவர், நடைமுறையில் இதைச் செயல்படுத்த விரும்பினார். உலகப் பொருளாதார நெருக்கடியான சமயம். கடைகளில் விற்பனையில்லை. தொழில்கள் திவாலாகின்றன. 4500 பேருள்ள ஊரில் 1500 பேருக்கு வேலையில்லை. அவ்வூரில் 220 குடும்பங்கள் தர்ம சாப்பாட்டை எதிர்பார்க்கும் வருஷம் - 1933 - அந்த ஊர் பெயர் வோர்கல். பணத்தைப் பெட்டியில் வைத்திருந்தால் பணம் பயன்படாது. அதற்கு மதிப்பில்லை. பணம் நடமாடிக்கொண்டிருந்தால் பெருகும்என அவர் நம்பினார். அவர் அவ்வூர் மேயர். 40,000 ஷில்லிங் பணம் இருந்தது. இதைச் செலவு செய்தால் 40,000 ஷில்லிங் பெறுமான வேலை நடக்கும். அதற்குப் பதிலாக இதை பாங்கில் போட்டு, ரசீது பெற்று பணம் தர வேண்டியவர்க்கு இந்த ரசீதைக் கொடுத்தால் ரசீது பணம் போலாகும். அதை அவர்கள் 1 மாதத்திற்குள் செலவு செய்தால் வருஷத்தில் 12 முறை பணம் புரளும். அதனால் பணம் பெருகும்என நினைத்தார். இவர் திட்டத்தை ரயில்வேயும், போஸ்ட் ஆபீஸும் தவிர மற்றவர் அனைவரும் ஏற்றனர். அத்துடன் எவருக்கு எந்த நேரம் ரசீதில் நம்பிக்கையில்லைஎன்றாலும் பாங்கில் ரசீதைக் கொடுத்தால் பணம் கொடுத்துவிடுவார்கள். 100க்கு 2 ரூபாய் குறைத்துத் தருவார்கள். திட்டம் அமுலாயிற்று. கடைகளில், ஆபீஸுகளில் ரசீதைத் தடை சொல்லாமல் பணமாகக் கருதி ஏற்றனர். ஊர் சுறுசுறுப்பாயிற்று, கலகலப்பாயிற்று. ரோடுகள் போட முனைந்தனர். புது விளக்கு தெருவில் போட்டனர். வேலையில்லாதவருக்கு வேலை கிடைத்தது. 1500 பேருக்கும் வேலை கிடைத்தது. கடைகளில் வியாபாரம் பெருகியது. கடைகள், தொழில்கள் திவாலாவது நின்றுவிட்டது. வழக்கத்திற்கு மாறாக கார்ப்பரேஷனில் வரி வசூலாகியது.

*பின்பக்க அட்டையில் தொடரும்.....*

*முன்பக்க அட்டையின் தொடர்ச்சி.....*

முன்கூட்டியும் வசூலாகியது. வீடுகளை மக்கள் புதுப்பித்தனர். வறுமை நிறைந்த ஊரில் வளம் பெருகியது. எவரும் ரசீதை 1 மாதத்திற்கு மேல் சேமித்து வைக்காததால் 1 வருஷத்தில் 14 மடங்கு பணம் செலவாகியது. அதனால் 14 மடங்கு பணம் பெருகியது. உலகமே வறுமையில் அழுந்திய நேரம், இவ்வூர் வறுமையினின்று எழுந்து வெளிவந்து சுபிட்சமாயிற்று. ரிஸர்வ் பேங்க் இதை ஆமோதிக்கவில்லை; தடை செய்தது. அவரவர் தங்கள் ரசீதைக் கொடுத்துப் பணம் பெற்றனர். மீண்டும் 1500 பேருக்கு வேலையில்லை. ரோடு போடுவது, வீடு கட்டுவது, கடை வருமானம் நின்றது. மீண்டும் தொழில்கள், கடைகள் திவாலாயின. பிரெஞ்சு பிரதமர் வந்து பார்வையிட்டு தாம் இதைப் பின்பற்ற விரும்பினார். அருகில் உள்ள 30 ஊர்கள் இதைப் பின்பற்ற முடிவு செய்தன.

- ✡ பாங்க் அனைத்தையும் தடை செய்தது.
- ✡ *இந்த அனுபவம் அன்னை கொள்கையின் உண்மையை எடுத்துக் கூறுகிறது.*
- ✡ இந்த மேயர் ஆகஸ்ட் 15இல் பிறந்தவர்.
- ✡ இவர் 1884இல் பிறந்தவர். பகவான் பிறந்த 12 ஆண்டிற்குப் பிறகு பிறந்தவர். பகவானும் அன்னையும் பிறந்தபின் உலகம் எதிர்காலத்தில் அவர்கள் கூறப்போகும் கொள்கைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் செயல்பட ஆரம்பித்ததை சரித்திரம் கூறுகிறது. அதில் இதுவும் ஒரு செய்தி.
- ✡ மக்களுக்கு எவ்வளவு பெரிய நன்மை ஏற்பட்டாலும் சமூகம் அதை அனுமதிக்காதுஎன்பதும் இதனால் தெரிகிறது.
- ✡ சமூகத்தில் இருளும் பொய்யும் ஆட்சி செய்கின்றன. அவை மெய் வந்து தம்மை அழிக்க இடம் தாரா.
- ✡ 14 மடங்கு பணம் 13 மாதத்தில் பெருகி பெருநன்மைகளைக் கண்ட பின்னும் பாங்க் இத்திட்டத்தை ரத்து செய்தது பழையது புதியதை அனுமதிக்காது, மாமியார் மருமகளை ஏற்கமாட்டாள், இன்று மருமகள் மாமியாரை ஏற்கமாட்டாள்எனக் கூறுகிறது.

❀ ❀ ❀

February 2009 Jiviyam 14 Malar 10
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191